வானவில்

VAANAVIL

இதழ் 183 பங்குனி 2026

ISSUE 183 MARCH 2026

அமெரிக்காவின் கொல்லைப்புறமாக மாறிவரும் இலங்கை!

அண்மையில் இலங்கையின் கடற்பரப்பில் வைத்து (காலி துறைமுகத்தில் இருந்து சுமார் 30 மைல் தொலைவில்) அமெரிக்கா, ஈரானிய நாட்டின் கடற்படை கப்பல் ஒன்றைத் தாக்கி மூழ்கடித்து அதில் இருந்த மாலுமிகளில் சுமார் 80 பேர் வரையில் கொன்றும் பலரைக் காயப்படுத்தியும் எதேச்சாதிகார நடவடிக்கையில் ஈடுபட்டதன் மூலம், இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், இறையாண்மை என்பனவற்றை கடுமையாக மீறியிருக்கிறது.

அமெரிக்கா தனது இந்த நடவடிக்கைக்காக ஈரானிடமோ அல்லது இலங்கையிடமோ இதுவரை சாதாரண முறையில் கூட ஒரு வருத்தம் தெரிவிக்காததுடன், தனது நடவடிக்கை சரியானது என நியாயப்படுத்தியும் வருகின்றது.

அதே வேளையில், அமெரிக்காவின் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையை ஈரான் வன்மையாகக் கண்டனம் செய்திருப்பதுடன், இந்த நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கப்படும் எனவும் அறிவித்திருக்கிறது. ஆனால், இந்தச் சம்பவத்தால் இன்னொரு வகையில் பாதிக்கப்பட்ட நாடான இலங்கை (அரசாங்கம்) இந்த நடவடிக்கை குறித்து மௌனமாக இருந்து வருகிறது.

அது மாத்திரமல்ல, இஸ்ரேலிய சியோனிஸ்டுகள் ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா கொமேனியை குண்டு வீசிப் படுகொலை செய்ததைகோ, அமெரிக்கா ஈரானின் பாலர் பாடசாலையொன்றின் மீது குண்டு வீசி நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கொலை செய்ததைப் பற்றியோ, இலங்கை அரசு இதுவரை எந்தவொரு கருத்தையும் கூட வெளியிடவில்லை. அதே நேரத்தில், ஈரான் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதை இலங்கையின் அனுரகுமார அரசு வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இலங்கை அரசின் இத்தகைய நடவடிக்கைகள், மத்திய கிழக்கில் தற்போது நடந்து வரும் போரில், அது எந்தப் பக்கம் நிற்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

இவ்வளவுக்கும் மிக நீண்ட காலமாக தன்னை ஒரு இடதுசாரி கட்சி என்று சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி. கட்சி தலைமையிலான இன்றைய அரசு, தான் முன்னர் பின்பற்றிய கொள்கைகளை தூக்கி வீசிவிட்டு, இன்று உலக ஏகாதிபத்தியமான அமெரிக்காவுக்கு சார்பாகவும், கொலைகார சியோனிச இஸ்ரேல் அரசுக்கு சார்பாகவும், தென்னாசிய விஸ்தரிப்புவாத சக்தியான இந்தியாவுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வருகின்றது. இது அந்தக் கட்சி எவ்வளவு தூரம் மக்களுக்குத் துரோகம் செய்கிறது என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது.

இலங்கையில் இதுவரை காலமும் ஆட்சியில் இருந்த ஏகாதிபத்திய சார்பு – வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளோ அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான தேசியவாத அரசுகளோ, இன்றைய அரசு அளவுக்கு உலக மற்றும் பிராந்திய ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டது கிடையாது. அந்த அரசுகள் வெளிவிவகாரக் கொள்கையைப் பொறுத்தவரையில், பாரம்பரியமான அணிசேராக் கொள்கையை ஓரளவு பற்றுறுதியுடன் பின்பற்றி வந்துள்ளன.

அந்த அரசுகளின் அணிசேராக் கொள்கை ஏகாதிபத்திய சக்திகளுக்கு உவப்பானதாக இல்லாத போதும், அவர்களின் ஆட்சிக் காலங்களில் இலங்கையின் இறையாண்மையை ஏகாதிபத்திய சக்திகள் இவ்வாறு மீறத் துணிந்ததில்லை.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் காரணமாக, பிராந்திய வல்லரசான இந்தியாவும், மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளும், இலங்கையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க எப்பொழுதும் முயன்று வந்துள்ளன. அதனால்தான் இலங்கையில் 200 வருடங்களுக்கு

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

ஆக்கிரமித்தல் என்பது கௌரவம்! கொல்லுதல் என்பது வேடிக்கை!

இது என்ன உலகம்? பல நூறு கோடி மக்கள் உலகத்தில் நடக்கும் அநியாயங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்த இன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து செய்யும் அட்டூழியங்கள் அனைத்தும் உடனுக்குடன் காணொலிகளாகவும் செய்திகளாவும் எம்மை வந்தடைந்து திகிலடையச் செய்த வண்ணமுள்ளன.

பலஸ்தீன மக்கள் மீதான இனப்படுகொலை, வெனிசுவேலா ஜனாதிபதி மற்றும் அவரது மனைவி கடத்தல், காரணம் எதுவுமின்றி இரண்டு தடவைகள் ஈரான் மீதான தாக்குதல்கள் மற்றும் தலைவர்கள் கொல்லப்படுதல், பெய்ரூட் நகரத்தை தகர்த்தல், அடுத்ததாக, கியூபாவைத் தாக்கப் போவதாக மிரட்டல்... காட்டுமிராண்டிகளின் காலகட்டத்திற்கு மனித நாகரீகம் திரும்பிவிட்டதா?

ஜனவரி மாதத் தொடக்கத்தில் வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்காவிற்கு கடத்தியதைத் தொடர்ந்து, கியூபாவிற்கான வெனிசுவேலாவின் எண்ணெய் விநியோகங்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. அதுவரைக்கும் கியூபாவின் பிராந்திய நட்பு நாடான வெனிசுவேலா ஒரு நாளைக்கு சுமார் 35,000 பீப்பாய்கள் எண்ணெயை அனுப்பியதாக நம்பப்படுகின்றது. இது கியூபாவின் எண்ணெய் தேவையில் பாதியாகும்.

1959 இல் அமெரிக்காவின் கைப்பொம்மையான ஃபுல்ஜென்சியா பாடிஸ்டா (Fulgencio Batista) ஆட்சியைக் கவிழ்த்து கியூபாவில் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சிகர அரசு நிறுவப்பட்டது. புரட்சியின் பின்னர் அமெரிக்கா, கியூபாவுடன் மிகவும் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது. வெனிசுவேலா அரசாங்கத்தை பயமுறுத்தி கட்டுக்குள் கொண்டு வந்த ட்ரம்ப் நிர்வாகம், இப்போது கியூபா மீது தன் கவனத்தை திருப்பியுள்ளது.

சுமார் 11 மில்லியன் மக்களைக் கொண்ட கியூபா தீவு, எரிபொருள் தேவைக்கு இறக்குமதியையே பெரிதும் நம்பியுள்ளது. அமெரிக்காவின் 64 ஆண்டு கால பொருளாதாரத் தடையால் துவண்டு போயிருக்கும் கியூபாவிற்கு, வெனிசுவேலா மற்றும் மெக்ஸிகோவிலிருந்து எண்ணெய் ஏற்றுமதி செய்யத்தடை விதித்ததோடு, கியூபாவுக்கு எண்ணெய் விற்கும் எந்தவொரு நாட்டிற்கும் 10% வரிகளை அதிகரிக்கப் போவதாகவும் ட்ரம்ப் அச்சுறுத்தி வருகிறார். அத்தோடு, கியூபாவை நட்பு ரீதியாக கைப்பற்ற வேண்டும் என்றும் ஒப்பந்தம் ஒன்றிற்கு வாருங்கள் அல்லது சொல்ல முடியாத விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் ட்ரம்ப் அண்மைக்காலமாக திரும்பத்திரும்ப பகிரங்கமாகக் கூறி வருகின்றார்.

ட்ரம்ப் நிர்வாகம் சமீபத்தில் மேற்கொண்டுள்ள இராணுவ அழுத்தம் காரணமாக கியூபா தற்போது மிக மோசமான எரிசக்தி நெருக்கடி ஒன்றினை எதிர்கொள்கின்றது. கியூபாவின் மின்சாரம், தொழில்துறை, சுற்றுலாத்துறை மற்றும் வணிக நிறுவனங்கள் எண்ணெயின்றி இயங்க முடியாதுள்ளது. அதாவது இந்த நெருக்கடியால் மருத்துவமனைகள், பாடசாலைகள், வீடுகள், கடைகள் மற்றும் மக்களின் நாளாந்த அத்தியாவசியத் தேவைகள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளன.

சில வாரங்களுக்கு முன்பு, கியூபாவுக்கு எரிபொருள் ஏற்றுமதி செய்யும் ஒரே நாடாக அமெரிக்கா இருக்கும் பட்சத்தில், அமெரிக்கா அதற்கு எண்ணெய் விற்பனையைத் தொடங்கும் என்று ட்ரம்ப் அறிவிப்பு ஒன்றினை விடுத்தார். எனினும், கடந்த மூன்று மாதங்களில் எரிபொருளை ஏற்றிச் செல்லும் ஒரு கப்பல் கூட கரீபியன் தீவுக்கு வரவில்லை என்று கியூபா ஜனாதிபதி டயஸ்–கேனல் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கு இருக்கும் அவசரகால பொருளாதாரச் சட்டத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தியே ட்ரம்ப் இறக்குமதி வரிகளை அதிகரித்து வருகின்றார். பெப்ரவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் விடுத்த தீர்ப்பு ஒன்றில், அவசரகால பொருளாதாரச் சட்டத்தைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்று அறிவித்திருந்தது. எனினும் ட்ரம்ப் பிறிதொரு சட்டத்தை பயன்படுத்தி இறக்குமதி வரி அதிகரிப்பை தொடர்ந்து அமுல்படுத்தி வருகின்றார்.

மார்ச் 16 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "கியூபாவை கைப்பற்றும் கௌரவம் தனக்கு கிடைக்கும்" என்று நம்புவதாகக் கூறினார். மேலும் "நீங்கள் உண்மையை அறிய விரும்புகிறீர்கள் என்றால், நான் கியூபாவை விடுவிப்பதோ அல்லது எடுத்துக் கொள்வதோ, என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். கியூபா இப்போது மிகவும் பலவீனமான தேசம்" என்றார் அவர்.

மார்ச் 4 ஆம் இலங்கையில் ஈரானியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டு 104 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ட்ரம்ப், ஈரானிய கப்பல்களை மூழ்கடிப்பது அவற்றைக் கைப்பற்றுவதை விட 'மிகவும் வேடிக்கையானது' என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தன்னிடம் கூறியதாக கூறினார்.

அமெரிக்கா–இஸ்ரேல் புரியும் சகல அநியாயங்களையும் தட்டிக் கேட்காது ஏனைய ஐரோப்பிய–நேட்டோ நாடுகள் போன்று, இரு பெரிய வல்லரசுகளான ரஷ்யாவும் சீனாவும் ஏன் இன்னமும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி அவர்களை நோக்கி முன்வைக்கப்படுகின்றது. அவர்கள் நேரடியாகத் தலையிடாமல் இருப்பதற்கான பிரதான காரணம், தலையிட்டால் மூன்றாம் உலக யுத்தம் ஒன்று மூண்டுவிடலாம் என்பதே.

ரஷ்யாவின் நட்பு நாடுகளான வெனிசுவேலா மற்றும் ஈரான் மீதான தாக்குதல்கள் உக்ரைன் போரிலிருந்து ரஷ்யாவின் கவனத்தை திசைதிருப்புவதையும் நோக்கமாகக் கொண்டது என்பது எளிதில் எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடியது. உலகில் 800 இராணுவத்தளங்களை வைத்துள்ள அமெரிக்கா, அதில் 400 தளங்களை சீனாவிற்கு அண்மையாக நிலை நிறுத்தியுள்ளது. எனவே எந்தவொரு அமெரிக்காவின் அடாவடித்தனத்திற்கும் எதிராக சீனா தூண்டப்பட்டால் விளைவுகள் மோசமானதாகவே இருக்கும்.

கியூபாவை பொருளாதார நெருக்கடியில் சிக்க வைத்து கைப்பற்ற முனையும் அமெரிக்காவின் திட்டம் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. 2025 இல் பதவிக்கு ட்ரம்ப் நிர்வாகம் எப்படியாது தங்கள் பதவிக்காலத்தில் கியூபாவை அடிபணிய வைக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். சிலவேளைகளில் கோழைத்தனமான முயற்சிகளை எடுத்து அமெரிக்கா வெற்றி பெற்றாலும், அந்த வெற்றி தற்காலிகமானதாகவே அமையும். ஏனெனில், ஏழாண்டு காலம் போராடி இராணுவ சர்வாதிகாரி பாடிஸ்டாவை தூக்கியெறிந்த வீரஞ்செறிந்த வரலாற்றைக் கொண்ட கியூப மக்கள், இன்னுமொரு தடவை ஏகாதிபத்தியத்தை வீழ்த்தத் தயாராகவே உள்ளனர்.

தொடர்பு மின்னஞ்சல் முகவரி: sunvaanavil@gmail.com
'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

வானவில்

அரசியல் நாடகமல்ல, நீதியே அவசியம்

முன்னாள் புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சல்லே (Suresh Sallay) கைது செய்யப்பட்டமை, நாடு முழுவதும் தீவிர விவாதங்களையும் கவலைகளையும் தூண்டியுள்ளது. தவறு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் எந்தவொரு குற்றச்சாட்டும், கவனமாகவும் பக்கச்சார்பின்றியும் ஆராயப்பட வேண்டியது அவசியமானது. அதேவேளையில், சல்லேக்கு எதிரான நடவடிக்கையைச் சூழ்ந்துள்ள நிலைமைகள், இந்தச் செயல்முறை நம்பகமான ஆதாரங்களினால் இயக்கப்படுகின்றதா அல்லது அரசியல் நோக்கங்களினால் இயக்கப்படுகின்றதா என்ற தீவிர கேள்விகளை எழுப்புகின்றன. ஒருவேளை அரசியல் காரணங்களே இதன் பின்னணியில் இருக்குமாயின், அது ஒரு தீவிரமான சட்டச் செயல்பாட்டை பழிவாங்கும் நடவடிக்கையாக மாற்றும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

சட்டத்தின் ஆட்சியால் நிர்வகிக்கப்படும் ஒரு ஜனநாயக சமூகத்தில், விசாரணைகளும் கைதுகளும் தெளிவான, சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களின் அடிப்படையில் அமைய வேண்டும். சட்ட அமுலாக்க நிறுவனங்களின் நடவடிக்கைகள் ஊகங்கள் அல்லது வெளிப்புற அழுத்தங்களால் அல்லாமல், உண்மைகள் மற்றும் சட்டத் தரநிலைகளால் வழிநடத்தப்படுகின்றன என்பதை நிரூபிக்கும் திறனிலேயே அந்த நிறுவனங்களின் நம்பகத்தன்மை பெரிதும் தங்கியுள்ளது.

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் முன்னாள் புலனாய்வுத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நடந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும், பிடிபடாத ஒரு சூத்திரதாரி (Mastermind) பற்றிய பேச்சுக்கள் இன்னும் நீடிக்கின்றன.

தொடர்ந்து வரும் தேர்தல்களில் திரு. கோட்டாபய ராஜபக்ச அவர்கள் நாட்டின் தலைவராக வருவதற்கு ஏற்ற ஒரு வளமான சூழலை உருவாக்கும் வகையில், ஒரு தேசிய பாதுகாப்பு நெருக்கடியை ஏற்படுத்துவதற்காகவே ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகள் திட்டமிடப்பட்டன என்ற ஒரு கதையாடல் (Narrative) உருவாக்கப்பட்டுள்ளது. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் ஏதோ ஒரு கட்சிக்கு அல்லது தனிநபர்களுக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலைகளை உருவாக்குவது இயல்பே. 2022 பொருளாதார நெருக்கடி இறுதியாக 2024 இல் தேசிய மக்கள் சக்தி (NPP) ஆட்சிக்கு வருவதற்கான அரசியல் களத்தை அமைத்துக் கொடுத்தது. அதற்காக, அரசியலில் மேலாதிக்கம் பெறுவதற்காக அந்தப் பொருளாதார நெருக்கடி தேசிய மக்கள் சக்தியால் உருவாக்கப்பட்ட ஒரு நிகழ்வு என்று அதற்குப் பொருள் கொள்ள முடியாது.

தற்போதைய நிகழ்வில், அமெரிக்க மத்திய புலனாய்வு அமைப்பான எஃப்.பி.ஐ (FBI) கண்டுபிடிப்புகளைக் குறிப்பிட்டுக் காட்டினாலும் கூட, அவை சல்லேக்கு எதிராகப் பரப்பப்படும் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்துவதாகத் தெரியவில்லை. அந்தத் தொடர் குண்டுவெடிப்புகளில் அமெரிக்கர்கள் உட்பட வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்கையில், தங்கள் நாட்டுப் பிரஜைகளின் மரணத்திற்கு காரணமான தாக்குதலை முன்னின்று நடத்தியது யார் என்பதைக் கண்டறிய அந்த நாடுகளின் புலனாய்வு அதிகாரிகளுக்கு இயல்பான ஆர்வம் இருக்கும். இந்தத் தாக்குதல்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் (ISIS) அமைப்புடன் தொடர்புடைய ஒரு குழுவால் நடத்தப்பட்டவை என்று எஃப்.பி.ஐ முடிவு செய்தது.

எந்தவொரு நாட்டிலும், புலனாய்வு அதிகாரிகள் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், சர்வதேச புலனாய்வு ஒத்துழைப்பு மற்றும் இரகசியமான செயல்பாடுகளைக் கையாளுவதால், மிகவும் உணர்வுபூர்வமான சூழலிலேயே பணியாற்றுகின்றனர். எனவே இத்தகைய நபர்களைப் பாதிக்கும் முடிவுகள் விதிவிலக்கான கவனத்துடனும் பொறுப்புடனும் கையாளப்பட வேண்டும். இலங்கையின் பாதுகாப்பு நிலப்பரப்பில், குறிப்பாக பல தசாப்த கால உள்நாட்டு மோதலின் போதும் அதற்குப் பின்னரும், இலங்கையின் புலனாய்வு சமூகம் ஒரு முக்கியமான பங்கினை வகித்துள்ளது. இத்துறையில் பணியாற்றும் அதிகாரிகள் பெரும்பாலும் கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்திருக்கின்றனர்.

எந்தவொரு ஜனநாயக அமைப்பிலும் பொறுப்புக்கூறல் என்பது அவசியமானது என்றாலும், அந்தப் பொறுப்புக்கூறல் முயற்சியானது பொதுமக்களின் முன் அவமானப்படுத்தும் செயலாகவோ அல்லது அரசியல் உள்நோக்கம் கொண்ட இலக்காகவோ சிதைந்துவிடக் கூடாது. இந்த விடயத்தில், ஒரு பரந்த அரசியல் மற்றும் சமூகச் சூழலில் சர்ச்சை எழுந்துள்ளது. இன்றைய இலங்கை, கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் என இருதரப்பினரதும் முழு கவனத்தையும் கோரும் பல்வேறு அவசர சவால்களுடன் போராடிக்கொண்டிருக்கிறது.

இது பொறுப்புக்கூறலுக்கு எதிரான ஒரு வாதமாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது. மாறாக, பொது நிறுவனங்களின் நேர்மையைப் பேணுவதற்குப் பொறுப்புக்கூறல் இன்றியமையாதது. தகுதி அல்லது கடந்தகால சேவையைப் பொருட்படுத்தாமல், எந்தவொரு தனிநபரும் தவறு செய்ததற்கான நம்பகமான ஆதாரங்கள் கிடைத்தால், சட்டம் அதன் கடமையைச் செய்ய வேண்டும். சட்டத்திற்கு மேல் எவரும் இல்லை. இருப்பினும், பொறுப்புக்கூறல் என்ற கோட்பாடு நியாயம் என்ற கோட்பாட்டுடன் இணைந்து செயல்பட வேண்டும். விசாரணைகள் முழுமையானதாகவும், ஆதாரங்களின் அடிப்படையிலானதாகவும், அரசியல் செல்வாக்கற்றதாகவும் இருக்க வேண்டும்.

கைதுகள் என்பது உறுதியான ஆதாரங்களைச் சமர்ப்பித்த பின்னரே நடக்க வேண்டுமே தவிர, அதற்கு முன்னதாக அல்ல. சட்டப் பொறிமுறைகளை அரசியல் போட்டிக்கான கருவிகளாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகளைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு இலங்கை பல ஆண்டுகளாகப் போதுமான அரசியல் கொந்தளிப்புகளைச் சந்தித்துள்ளது.

நாட்டின் ஜனநாயக நிறுவனங்கள் இன்னும் பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பும் பணியிலேயே உள்ளன. பலமான சட்டபூர்வமான அடித்தளம் இல்லாமல் தனிநபர்களை இலக்கு வைப்பது போன்ற நடவடிக்கைகள், இந்த பலவீனமான முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் அச்சுறுத்தலைக் கொண்டுள்ளன.

இறுதியில், கையிலிருக்கும் பிரச்சினை ஒரு தனிநபரைப் பற்றியது மட்டுமல்ல. அது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தும் தரநிலைகளைப் பற்றியது. எனவே, சுரேஷ் சல்லேயின் கைது தொடர்பான சர்ச்சை தொடர்பில் கவனமாகச் சிந்திக்க வேண்டும். நிறுவனங்களைப் பலவீனப்படுத்துவதை விட, அவற்றைப் பலப்படுத்தும் வகையில் நீதி நிலைநாட்டப்படுவதை இலங்கை உறுதி செய்ய வேண்டும். புலனாய்வு அதிகாரிகளை அரசியல் இலக்குகளாக மாற்றுவது பொறுப்புக்கூறலுக்கோ அல்லது தேசிய ஸ்திரத்தன்மைக்கோ உதவாது.

சல்லே கைது செய்யப்பட்டதற்கான சரியான காரணம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இது அரசியலமைப்பின் 13 (1) வது பிரிவின் கீழ் ஓர் அடிப்படை உரிமையாகும். கைது செய்யப்படும் எந்தவொரு நபருக்கும் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும். நாட்டின் உச்ச சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள இந்த அடிப்படை உரிமையின் பக்கம் நாங்கள் நிற்கிறோம்.

–டெய்லி மிரர், மார்ச் 6, 2026

ஹோர்முஸ் நீரிணைக்கு போர்க் கப்பல்களை அனுப்ப முடியாது

ஈரான் மீதான போரை நடத்தி வரும் அமெரிக்கா ஹோர்முஸ் நீரிணையை திறக்க உதவி செய்ய வேண்டும் என அதன் நட்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்புக்கு நேட்டோ நாடுகள் உட்பட, அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளான ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா தங்கள் நாட்டுப் போர்க் கப்பல்களை அனுப்பும் திட்டம் எதுவும் இல்லை என்று அறிவித்துவிட்டன.

இஸ்ரேலும் அமெரிக்காவும் பெப்ரவரி 28 முதல் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத்தளங்கள், தூதரகங்கள் மீதும், இஸ்ரேல் மீதும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வலுவான பதிலடி கொடுத்து வருகின்றது.

அரபிக்கடலில் பெர்சியன் வளை குடாவையும், ஓமன் வளை குடாவையும் ஹோர்முஸ் நீரிணை இணைக்கிறது. இந்த நீரிணை ஈரான் கடல் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. தற்போது ஈரான் ஹோர்முஸ் நீரிணையை மூடியுள்ளது. இதனால் சர்வதேச அளவில் எரிபொருள் பற்றாக்குறை உருவாகி, விலையும் அதிகரித்துள்ளது.

இந்த நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலையில், அந்த நீரிணையில் கச்சா எண்ணெய்க் கப்பல்கள் கடந்து செல்ல பாதுகாப்பு தர வேண்டுமெனக் கூறி அதற்கான ஓர் இராணுவக் கூட்டணி அமைக்கும் நோக்கில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு ட்ரம்ப் அளித்த பேட்டியில்,

“உலகின் மொத்த எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கு கடந்து செல்லும் இந்த முக்கிய கடல்வழிப் பாதையான ஹோர்முஸ் நீரிணையை பாதுகாப்பதற்கு கூட்டு முயற்சி தேவை. இதில் நேட்டோ நட்பு நாடுகள், ஐரோப்பிய மற்றும் ஆசிய பசுபிக் நாடுகள் இணைய வேண்டும்.

ஹோர்முஸ் நீரிணை மூலம் பயனடையும் நாடுகள், அங்கு எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய உதவ வேண்டும். இதற்கு எவ்விதப் பதிலும் இல்லாமலோ அல்லது எதிர்மறையான பதில் வந்தாலோ, அது நேட்டோ அமைப்பின் எதிர்காலத்திற்கு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் கருதுகிறேன்.

நம்மிடம் நேட்டோ என்ற ஓர் அமைப்பு உள்ளது. நாங்கள் அவர்களிடத்தில் மிகவும் கனிவாகவே நடந்து கொண்டிருக்கிறோம். உக்ரைன் விவகாரத்தில் அவர்களுக்கு உதவ வேண்டிய கட்டாயம் எங்களுக்கு இல்லை. உக்ரைன் எங்களிடமிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. ஆயினும் நாங்கள் அவர்களுக்கு உதவினோம்.

இப்போது அவர்கள் எங்களுக்கு உதவுகிறார்களா என்பதைப் பார்ப்போம். ஏனெனில், ‘நாங்கள் அவர்களுக்குத் துணையாக இருப்போம் ஆனால் அவர்கள் நமக்குத் துணையாக இருக்க மாட்டார்கள்’ என்று நான் நீண்ட காலமாகவே கூறி வருகிறேன். அவர்கள் நமக்குத் துணையாக இருப்பார்களா என்பது எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. அமெரிக்காவைப் போலன்றி, ஐரோப்பாவும், சீனாவும் வளைகுடாப் பிராந்தியத்திலிருந்து வரும் எண்ணெயையே பெருமளவில் சார்ந்திருக்கின்றது” என்றார்.

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகளில் சீனா உதவத் தவறினால், இந்த மாத இறுதியில் சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் தான் திட்டமிட்டுள்ள சந்திப்பு ஒத்திவைக்கப்படக்கூடும் என்றும் ட்ரம்ப் சூசகமாகத் தெரிவித்தார்.

‘ஈரானுடனான போரில் ஏற்கெனவே நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். ஹோர்முஸ் நீரிணை வழியாக வரும் எண்ணெய்க் கப்பல்களுக்கு அமெரிக்க கடற்படை பாதுகாப்பு கொடுக்கும்’ என்றெல்லாம் பேசி வந்த ட்ரம்ப், தற்போது ஹோர்முஸ் நீரிணை வழியாக வரும் எண்ணெய்க் கப்பல்களை பாதுகாக்க தங்கள் போர்க் கப்பல்களை அனுப்புங்கள் என உலக நாடுகளிடம் கெஞ்சுகிறார். ட்ரம்ப்பின் கூற்றுகளும் அறிக்கைகளுமே அமெரிக்கா எதிர்பார்த்த திசையில் போர் செல்லவில்லை என்பதையே காட்டுகின்றது.

கடந்த 14 மாதங்களில் ட்ரம்பின் போர் முறையைப் பற்றி தெரிந்து கொண்டது என்னவென்றால், அவர் ஒருபோதும் தனது இலக்குகளைத் தெளிவாகச் சொல்வதில்லை. எனவே அவர் தோல்வியடைந்துவிட்டதாக யாரும் குற்றம் சாட்ட முடியாது. அதற்குப் பதிலாக, ஒவ்வொரு நாளும் ஒரு புதுக் கதையைச் சொல்லி, தனக்குத் தோன்றும் நேரத்தில் “வெற்றி” என்று அறிவித்துவிட்டு வெளியேறிவிடுவார்.

சுயநீதி பேசுபவர்கள் சொல்லொணாக் கொடூரர்களாக மாறும்போது

காலி கடற்பரப்பிற்கு அப்பால் புதன்கிழமை (04.03.2026) அன்று அமெரிக்காவினால் நடத்தப்பட்ட தொர்ப்பிடோ (torpedo) தாக்குதலில், ஈரானிய போர்க்கப்பலில் இருந்த சுமார் 35 மாலுமிகள் மட்டுமே உயிர் பிழைத்துள்ளனர். 100-இற்கும் மேற்பட்ட ஈரானியர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. உயிர் பிழைத்தவர்களை மீட்ட இலங்கை கடற்படையும் விமானப்படையும், அமெரிக்கத் தாக்குதலில் பலியான சுமார் 85 பேரின் உடல்களைக் கரைக்குக் கொண்டு வந்துள்ளன. போர் நடவடிக்கைகளில் ஈடுபடாத நிலையில் இருந்த ‘IRIS Dena’ என்ற ஈரானிய கடற்படைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும், மோதல் வலயத்திலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் இத்தனை கடற்படை வீரர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டதும் நிபந்தனையின்றிக் கண்டிக்கப்பட வேண்டியவை.

எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், அமெரிக்காவையும் மேற்கத்தைய நாடுகளையும் கண்டிக்கச் சிறு வாய்ப்புக் கிடைத்தாலும் தவறவிடாத ஜே.வி.பி (JVP) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம், புதன்கிழமை (04.03.2026) நடந்த இச்சம்பவத்தை வெளிப்படையாக இன்னும் விமர்சிக்கவில்லை. ஈரானியக் கப்பல் காலி துறைமுகத்தை வந்தடைவதற்கான அனுமதிக்குக் காத்திருந்தபோதுதான் தாக்குதலுக்கு உள்ளானதா என்று எதிர்க்கட்சிகள் நேற்று (05.03.2026) பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பின. அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கப்படவில்லை. அரசாங்கம் பதிலைத் தவிர்த்து நழுவல் போக்கைக் கடைப்பிடித்தது.

இந்தியப் பெருங்கடலில் புதன்கிழமை இந்தத் தாக்குதலை நடத்துவது குறித்து அமெரிக்கா இந்தியாவுக்குத் தெரிவிக்கவில்லை என்று நம்பப்படுகின்றது. இந்தியக் கடற்படையின் விருந்தினராக வந்திருந்த ‘IRIS Dena’ கப்பல் மூழ்கடிக்கப்பட்டது புதுடெல்லிக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருப்பது மட்டுமல்லாமல், மூலோபாய ரீதியிலான கவலையாகவும் மாறியுள்ளது. ஏனெனில், இந்தியா ஒரு பிராந்தியத் தலைவராகத் தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் ஒரு பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ‘குவாட்’ (Quad) அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான இந்தியாவை அமெரிக்கா அலட்சியம் செய்துவிட்டதா?

அனைத்திற்கும் மேலாக, அமெரிக்கா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட 40 நாடுகளின் கப்பல்களுடன் இணைந்து, இந்தியாவில் நடந்த சர்வதேசக் கப்பற்படை அணிவகுப்பில் (Fleet review) பங்கேற்றுவிட்டுத் இந்த ‘IRIS Dena’ திரும்பிக் கொண்டிருந்த போதே தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. இந்தியக் கடற்படையின் கிழக்குக் கடற்படைத் தலைமையகம் அமைந்துள்ள விசாகப்பட்டினத்தில்தான் இந்தப் பயிற்சிகள் நடைபெற்றன. இந்தக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதையும், அதன் ஊழியர்கள் கொல்லப்பட்டதையும் இந்நகர மக்களால் இன்னும் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. வியக்கத்தக்க வகையில், இந்தியா இச்சம்பவத்தை வெளிப்படையாகக் கண்டிக்காமல் மௌனம் காக்கிறது.

உலகில் எங்குள்ள ஈரானியச் சொத்துக்களும் முறையான இலக்குகளே என்று அமெரிக்கா நினைக்குமானால், அமெரிக்காவையும் அதன் நலன்களையும் கையாளுவதில் ஈரான் அதே போன்ற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதைக் குறை கூற முடியுமா? மத்திய கிழக்கு மோதல் என்பது தற்போது நடைபெற்று வரும் அமெரிக்க-இஸ்ரேலிய குண்டுவீச்சுகளுடன் சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ முடிந்துவிடப் போவதில்லை. இதற்குப் பழிவாங்குவோம் என்று ஈரான் சூளுரைத்துள்ளது.

இந்தியப் பெருங்கடலை அமைதி வலயமாக்குவது (Zone of Peace) குறித்து கடந்த ஐந்து தசாப்தங்களாகப் பேசப்பட்டு வந்தாலும், அது நடைமுறையில் அனைத்து நோக்கங்களுக்காகவும் ஒரு மோதல் வலயமாவே வேகமாக மாறி வருகிறது. இராணுவ நீக்கம், ஆக்கிரமிப்பு செய்யாமை, கப்பல் போக்குவரத்து சுதந்திரம், வெளிநாட்டுத் தளங்களை அகற்றுதல், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல் போன்ற முக்கிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்த அமைதி வலயக் கோட்பாடு. சிறிய நாடுகள் தாங்களாக உருவாக்காத மோதல்களுக்குள் இழுக்கப்படுவதைத் தடுப்பதும், பிராந்திய ஸ்திரத்தன்மையைப் பேணுவதுமே இதன் நோக்கமாக இருந்தது. இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார வலயத்திற்குள் (EEZ) அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய இந்தத் தாக்குதல், இந்தியப் பெருங்கடல் அமைதி வலயக் கோட்பாட்டின் பின்னணியில் வைத்துப் பார்க்கப்பட வேண்டும்.

ஈரானுக்கு எதிரான தனது தற்போதைய இராணுவ நடவடிக்கைகளை வளைகுடா பிராந்தியத்திற்கு அப்பால் அமெரிக்கா விரிவுபடுத்துவதும், இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார வலயத்தில் அமெரிக்க நீர்மூழ்கிக்

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...

புலம்பெயர் தமிழர்களின் போலித்தனம்

இலங்கைத் தலைவர் ஒருவர் மேற்கத்திய நாடு ஒன்றின் தலைநகரில் தரையிறங்கும் போதெல்லாம், எதிர்பார்க்கக்கூடிய ஒரு போலித்தனமான நாடகம் அரங்கேறுகிறது. புலம்பெயர் தமிழர்களில் ஒரு சிறிய ஆனால் முழக்கமிடும் குழுவினர், வெளியே கூடி விடுதலைப் புலிகளின் கொடியை அசைத்துக்கொண்டு, நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்து முழக்கமிடுகின்றனர். அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள் கண்டிக்கிறார்கள் இடையூறு விளைவிக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் எதைக் கண்டு கொள்ள மறுக்கிறார்கள் என்றால், அவர்களின் சொந்த மௌனத்தையும், தெரிவு செய்யப்பட்ட ஆத்திரத்தையும் தான். இதன் மூலம், நீதிக்காக அவர்கள் எழுப்பும் குரல் என்பது வெறும் போலித்தனம் என்பதை அவர்களே நிரூபிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கை அரசுக்கு எதிராக மட்டும் போர் புரியவில்லை. அவர்கள் எந்தத் தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறினார்களோ, அதே சமூகத்தையே கட்டுப்படுத்தினார்கள், அச்சுறுத்தினார்கள் மற்றும் கொடூரங்களுக்கு உள்ளாக்கினார்கள். கட்டாய ஆட்சேர்ப்புக்காகத் தங்கள் பிள்ளைகள் அழைத்துச் செல்லப்படுவதைத் தாய்மார்கள் திகிலுடன் பார்த்திருந்தனர். வகுப்பறைகளில் இருந்திருக்க வேண்டிய சிறுவர்களும் சிறுமிகளும் துப்பாக்கிகளை ஏந்துவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டனர். ஒரு வன்முறை கனவின் பலிபீடத்தில் சிறுவர் பருவம் தியாகம் செய்யப்பட்டது. கர்ப்பிணிப் பெண்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு தற்கொலைப் படைகளாக அனுப்பப்பட்டனர். பதின்ம வயதினர் அவர்களது இளமையை இழந்து போர்க்களத்திற்குத் தள்ளப்பட்டனர். தலைமைத்துவத்தை கேள்வி கேட்டவர்கள் அச்சுறுத்தல்களையும், தண்டனைகளையும் அல்லது மரணத்தையுமே சந்தித்தனர். மாற்றுக் கருத்து கொண்ட தமிழ் அரசியல்வாதிகளும் அறிவுஜீவிகளும் படுகொலை செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அன்றாட வாழ்வை அச்சமே ஆட்சி செய்தது.

ஜமீலா ஹுசைன்

இருந்தும் இன்று, இலண்டன், ரொறன்ரோ மற்றும் ஏனைய மேற்கத்திய நகரங்களின் வசதியான சூழலில் இருந்து கொண்டு, சில புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் புலிக்கொடியை ஏந்தி அது ஏதோ விடுதலைக்கும் கௌரவத்திற்கும் அடையாளம் என்பது போலக் காட்டிக்கொள்கிறார்கள். இது ஒரு சோகமான நகைச்சுவை.

தமிழ் சிறுவர்கள் அவர்கள் வீடுகளில் இருந்து இழுத்துச் செல்லப்பட்டபோது இவர்களது போராட்டங்கள் எங்கே போயின? கட்டாய ஆட்சேர்ப்பினால் குடும்பங்கள் சிதறடிக்கப்பட்டபோது இவர்களது பேரணிகள் எங்கே இருந்தன? மாற்றுக் கருத்துடைய தமிழர்கள் நிரந்தரமாக மௌனிக்கப்பட்டபோது மனித உரிமைகளுக்கான இவர்களது கூக்குரல்கள் எங்கே கேட்டன?

2009 போரின் இறுதிக்கட்டத்தில் கூட, பொதுமக்கள் சுருங்கிப்போன ஒரு நிலப்பரப்பிற்குள் சிக்கியிருந்தனர். விடுதலைப் புலிகள் அதன் தலைமைத்துவத்தின் உயிர் பிழைப்பிற்காக பொதுமக்களை வெளியேற விடாமல் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். சாதாரண தமிழ் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அந்த முடிவுகளின் பாதிப்புகளைச் சுமந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கேள்விக்கிடமற்ற விசுவாசத்தையும் தியாகத்தையும் கோரினார். ஆயிரக்கணக்கானோர் உயிரைத் தியாகம் செய்தனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சிதைந்தன. இருப்பினும், மோதலின் பெரும்பகுதி காலத்தில் அவரது சொந்த குடும்பம் பாதுகாப்பாக இருந்தது. போராளிகள் முன்னரங்கிற்கு அனுப்பப்பட்டபோது, தனிப்பட்ட கொண்டாட்டங்கள் தொடர்ந்தன. இந்த முரண்பாடு வேதனையானது மற்றும் மறுக்க முடியாதது.

அந்தக் கொடியை அசைப்பவர்கள் புறக்கணிக்க விரும்பும் வரலாறு இதுதான்.

இன்னொரு கடினமான கேள்வியையும் கேட்க வேண்டியது அவசியம். இந்தத் தொடர்ச்சியான போராட்டங்கள் இன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுக்கொடுக்கின்றன? அவை வடக்கு கிழக்கின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்றனவா? வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றனவா? பாடசாலைகளையோ அல்லது மருத்துவமனைகளையோ கட்டுகின்றனவா? இன்னும் ஆழமான வடுக்களைச் சுமக்கும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு அவை ஆதரவளிக்கின்றனவா?

கசப்பான உண்மை என்னவென்றால், இந்த புலம்பெயர் குழுக்களில் பலர் களத்தில் உள்ள தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை காட்டுவதை விட, தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரல்களை உயிர்ப்புடன் வைத்திருப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அங்கே கொடி என்பது சேவையின் அடையாளமாக இல்லாமல், தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஒரு கருவியாக

மாறுகிறது. இது நிதி திரட்டும் வலைப்பின்னல்களைச் செயற்பாட்டில் வைத்திருக்கிறது. பழைய கதைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. சில தனிநபர்களை அவர்கள் வாழும் நாடுகளில் அரசியலில் முன்னிலையில் வைத்திருக்க உதவுகிறது.

அதேவேளை, இலங்கையில் உள்ள தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடக்கும் அடையாளப் போராட்டங்களுக்கும் அவர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

மனித உரிமைகள் ஒருபோதும் நிராகரிக்கப்படக் கூடாது. பொறுப்புக்கூறல் ஒருபோதும் தவிர்க்கப்படக் கூடாது. அனைத்து சமூகங்களின் குறைகளையும் நிவர்த்தி செய்வதில் இலங்கைக்கு இன்னும் நிறைய வேலைகள் உள்ளன. ஆனால் நீதி என்பது ஒரு பக்கச் சார்பாக இருக்க முடியாது. ஒரு கொடூரமான போரின் ஒரு பக்கத்தை மட்டும் மையப்படுத்தி, விடுதலைப் புலிகள் தங்கள் சொந்த மக்கள் மீது இழைத்த கொடுமைகளை ஒருபோதும் புறக்கணிக்க முடியாது.

மேற்கத்திய அரசாங்கங்களும் தங்கள் நிலைப்பாட்டை ஆராய வேண்டும். பல நாடுகள் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளன. இருப்பினும், இலங்கைத் தலைவர்களின் உத்தியோகபூர்வ விஜயங்களின் போது, புலிக்கொடிகள் பகிரங்கமாகத் தெரிவதைக் காணலாம். அமைதியான முறையில் போராடும் உரிமை என்பது எந்தவொரு ஜனநாயகத்திலும் அடிப்படையானது. ஆனால் தற்கொலைத் தாக்குதல்கள், சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் அரசியல் படுகொலைகளுக்குப் பொறுப்பான ஓர் இயக்கத்தை மகிமைப்படுத்துவது ஒரு குழப்பமான செய்தியையே வழங்குகிறது.

சமீபத்தில் ரில்வின் சில்வா போன்ற தலைவர்கள் கூட வெளிநாட்டுப் பயணங்களின் போது இத்தகைய போராட்டங்களைச் சந்தித்தனர். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இந்த நடைமுறை மாறவில்லை. கொள்கை வேறுபாடுகள் பற்றியது அல்ல என்பதையே இது காட்டுகிறது. மாறாக, தமிழ் சமூகத்திற்கே அளவற்ற துயரங்களை இழைத்த ஆயுதப் போராட்டம் ஒன்றினைக் கைவிடச் சிலருக்கு இருக்கும் தயக்கத்தையே இது வெளிப்படுத்துகின்றது.

இந்த புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் உண்மையில் மனித உரிமைகளில் அக்கறை கொண்டவர்களாக இருந்தால், அவர்களது செயற்பாடுகள் நேர்மையானதாக இருக்க வேண்டும். அது ஒவ்வொரு பாதிக்கப்பட்டவரையும் அங்கீகரிக்க வேண்டும். கட்டாய ஆட்சேர்ப்பு அச்சத்தில் வாழ்ந்த தமிழ் குடும்பங்களை அது அடையாளப்படுத்த வேண்டும். அவர்கள் விரும்பாத ஒரு போரில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோருக்காக அது பேச வேண்டும்.

கொடியை அசைப்பது எளிது. ஆனால் போரின் விளைவுகளுடன் வாழ்வது எளிதல்ல.

இலங்கையின் முன்னோக்கிய பயணம் அனைத்து தரப்பிலிருந்தும் முதிர்ச்சியையும் தைரியத்தையும் கோருகிறது. இது தனிப்பட்ட நலன்களுக்காக வரலாற்றை மாற்றி எழுதுவதை விடுத்து, சங்கடமான உண்மைகளை எதிர்கொள்வதைக் கோருகிறது. வன்முறையை யார் செய்திருந்தாலும், அதன் அனைத்து வடிவங்களையும் நிராகரிப்பதையே இது வலியுறுத்துகிறது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் ஆக்கபூர்வமான ஈடுபாடு, பொருளாதார ஆதரவு மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும். பிளவுகளைத் தேடுபவர்களை விட, ஆறாத வடுக்களைக் குணப்படுத்த விரும்புபவர்களின் குரல்களை அவர்கள் ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும்.

துப்பாக்கிகள் மௌனமாகி பதினேழு ஆண்டுகள் நெருங்கும் நிலையில், வெளிநாடுகளில் உள்ள சிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட நினைவுகளுக்கும் நமது நாடு பணயக்கைதியாக இருக்க முடியாது. அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த உதவாத போராட்டங்களில் தங்களை ஒரு அடையாளமாகப் பயன்படுத்துவதை விட சிறந்த ஒன்றிற்குத் தமிழ் சமூகம் தகுதியானது.

போலித்தனம் நீதியைக் கொண்டுவராது. கொடிகள் குடும்பங்களுக்கு உணவளிக்காது. உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் அனைத்து இலங்கையர்களின் நலனில் உண்மையான அர்ப்பணிப்பு மட்டுமே இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்தும்.

– டெயிலி மிரர், 25.02.2026

புரட்சிகளுக்கு சொந்தக்காரன்

ஒருநாள் வயலில் நெற்கதிர்களைக் காயவைத்துக் கொண்டிருந்த சமயம் திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. அப்போது ஷன்செங் அவர் மகனிடம், “உடனடியாக நெற்கதிர்களை அப்புறப்படுத்து. இல்லையென்றால் மழை நாசம் செய்துவிடும்” என்றார். அவனும், விரைவாக கதிர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான்.

திடீரென்று, அவனைக் காணவில்லை. தந்தை ஷன்செங், வயல் முழுவதும் தேடினார். எங்குத் தேடியும் அவன் கிடைக்காததால் ஷன்செங், மற்ற வேலையாட்களை வைத்து நெற்கதிர்களைப் பாதுகாப்பாக வீடு கொண்டுபோய்ச் சேர்த்தார்.

மழை நின்றது. மகன் வந்தான். “எங்கு சென்றாய்? உன்னிடம் நான் என்ன சொன்னேன்?” என்று தந்தை கோபத்துடன் கேட்டார்.

“அப்பா… நம்மிடம் வேலையாட்கள் இருக்கிறார்கள். அவர்கள், இந்த வேலையைச் செய்வார்கள். ஆனால், பக்கத்து நிலத்தில் இருப்பவர்கள் மிகவும் ஏழைகள். அவர்களுக்கு உதவவே அங்கு நான் சென்றேன். விளைபொருள்கள் நாசமாகிவிட்டால் அவர்களால் ஈடு செய்ய முடியாது. குத்தகை பணம் கூட கொடுக்க முடியாது” என்று நிதானமாகப் பதில் சொன்னான், அவன்.

“உனக்கு உன்வீடு முக்கியமா… இல்லை, அவர்களுடைய வீடு முக்கியமா...” என்று மீண்டும் கோபத்துடன் கேட்டார் ஷன்செங்.

“அவர்கள் வீடுதான் முக்கியம்” என சட்டென பதில் சொன்னான் அவன்.

இப்படிப் பதில் சொன்னவர் வேறு யாருமில்லை. சீன மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட புரட்சிகளுக்கு சொந்தக்காரன் மாவோ என்ற மா சே துங் தான் அவர்!.

ஐரோப்பா ஒரு ‘மூன்றாவது வழியை’ வழங்க முடியுமா?



டொனால்ட் டரம்ப் நிர்வாகம் புலம்பெயர்ந்தோருக்கு எதிராக மட்டுமன்றி, அமெரிக்க குடிமக்களுக்கு எதிராகவே கொடூரமான அடக்குமுறை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தச் சூழலில், அமெரிக்க தாராளவாத (Liberal) வட்டாரங்களுக்கு இடையே ஒரு புதிய போக்கு உருவாகியுள்ளது. இன்றைய உலகின் இரு பெரும் சக்திகளான சீனா, அமெரிக்கா ஆகிய இரண்டிற்கும் மாற்றாக, ஒரு ‘மூன்றாவது வழியை’ அல்லது ஒரு புதிய ‘மாதிரியை’ ஐரோப்பா வழங்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அமெரிக்க தாராளவாதிகள் ஒருபோதும் சீனாவால் ஈர்க்கப்பட்டவர்கள் அல்ல. எனவே அவர்கள் சீன மாதிரியை நிராகரிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், அமெரிக்காவிற்குள்ளேயே ஜனநாயகம் சிதைந்து வரும் நிலையில், பொருளாதார வெற்றியையும், பயனுள்ள ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியையும் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அவர்கள் ஐரோப்பாவில் காண்கிறார்கள். இந்தச் சாத்தியம் நனவாக வேண்டுமானால், ஐரோப்பா தனது பொருளாதாரத்தைச் சீரமைப்பதோடு, தீவிர வலதுசாரி சக்திகளைத் தள்ளி வைக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஐரோப்பிய ஜனநாயகமும் ஏகாதிபத்தியமும்

அமெரிக்க தாராளவாதிகளுக்கு ஐரோப்பிய ஜனநாயகம் கவர்ச்சிகரமானதாகத் தோன்றினாலும், மூன்றாம் உலக நாடுகளின் பார்வையில் அது எப்போதும் ஏகாதிபத்தியத்துடனேயே தொடர்புடையதாக இருந்து வருகிறது. காலனித்துவ பேரரசுகள் முறைப்படி முடிவுக்கு வந்த பின்னரும் இந்த நிலை தொடர்கிறது. ஈரானின் மொசாடெக், கொங்கோவின் பாட்ரிஸ் லுமும்பா முதல் ஈராக்கின் சதாம் உசேன் வரை, தங்கள் நாட்டு இயற்கை வளங்களின் மீது சுதந்திரமான இறையாண்மையை உறுதி செய்ய முயன்ற ‘பிடிவாதமான’ மூன்றாம் உலக அரசாங்கங்களுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் தீட்டிய பெரும்பாலான சதித்திட்டங்களில் பிரித்தானியா ஒரு தீவிர கூட்டாளியாக இருந்துள்ளது.

பேராசிரியர் பிரபாத் பட்நாயக்

பிரான்சைப் பொறுத்தவரை, ‘பிராங்கோபோன் ஆபிரிக்கா’வில் காலனி ஆதிக்க நீக்கம் என்பது முழுமையடையவே இல்லை. முறைப்படி சுதந்திரம் பெற்ற முன்னாள் பிரெஞ்சு காலனிகள் பலவற்றில் பிரெஞ்சுப் படைகள் தொடர்ந்து நிலை நிறுத்தப்பட்டுள்ளன. புர்கினோ பாசோவின் தோமஸ் சங்காரா பிரெஞ்சுப் படைகளை வெளியேற்ற முயன்றபோது, அவர் ஒரு சதித்திட்டத்தின் மூலம் தூக்கியெறியப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இதற்குப் பின்னால் பிரான்சின் வலுவான ஆதரவு இருந்ததாக சந்தேகிக்கப்படுகிறது. தற்போதுதான் புர்கினோ பாசோ உள்ளிட்ட சில மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பிரெஞ்சுப் படைகளை வெளியேற்றுவதற்கான புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காஸாவில் நடக்கும் இனப்படுகொலைக்கு ஐரோப்பா அளிக்கும் ஆதரவு இதே பாணியின் ஒரு பகுதியாகும். மேலும், பல ஐரோப்பிய தாராளவாதிகள் தங்கள் அரசாங்கங்களின் இந்த நிலைப்பாட்டோடு மறைமுகமாக உடன்படுகிறார்கள். உதாரணமாக, பெர்லின் திரைப்பட விழாவின் நடுவர் குழுத் தலைவரான ஜெர்மன் திரைப்பட இயக்குநர் விம் வெண்டர்ஸ், இந்த இனப்படுகொலை குறித்த கேள்விக்கு, அரசியலையும் திரைப்படங்களையும் தனித்தனியாக வைத்திருக்க வேண்டும் என்று பதிலளித்தது இதையே காட்டுகிறது.

உக்ரைன் போரைத் தடுத்திருக்கக்கூடிய ‘மின்ஸ்க் ஒப்பந்தங்களை’ (Minsk agreements) சீர்குலைத்ததற்கு ஐரோப்பாவே பொறுப்பு என்பதையும், இன்று அந்தப் பிரச்சனையில் எந்தவொரு அமைதித் தீர்வுகளையும் கடுமையாக எதிர்ப்பதும் ஐரோப்பா தான் என்பதையும் நாம் சிறிது நேரம் மறந்துவிடுவோம். நேட்டோ அமைப்பை ரஷ்ய எல்லை வரை விரிவுபடுத்தும் முயற்சிக்கும், உக்ரைனின் விக்டர் யானுகோவிச் அரசாங்கம் தூக்கியெறியப்பட்டதற்கும் ஐரோப்பா துணை நின்றதைக்கூட விட்டுவிடுவோம். ஐரோப்பா ஒரு ‘மூன்றாவது வழியை’ வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய குறுகியவாதத்தை மட்டும் இப்போது ஆராய்வோம்.

பொருளாதாரக் காரணிகளும் தாராளவாதத்தின் வீழ்ச்சியும்

டொனால்ட் ட்ரம்ப்பின் அட்டூழியங்கள் அனைத்தும் அவரது தனிப்பட்ட குறைபாடுகளால் மட்டுமே ஏற்படுகின்றன என்று இந்த வாதம் பொதுவாகக் கருதுகிறது. ஆனால், அத்தகைய நபர் எப்படி அமெரிக்காவில் ஆட்சிக்கு வந்தார் அமெரிக்காவில் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டது போல, ஐரோப்பாவிலும் தாராளவாத ‘நடுத்தரப் பாதை’ ஏன் வீழ்ச்சியடைந்து வருகின்றது என்ற கேள்விகளை அது எழுப்புவதில்லை. சுருக்கமாகச் சொன்னால், இந்த வாதம் ட்ரம்ப்பின் வெற்றியையோ அல்லது ஐரோப்பாவின் அரசியல் எதிர்காலத்தையோ அடிப்படைப் பொருளாதாரக் காரணிகளுடன், குறிப்பாக முதலாளித்துவத்தின் தற்போதைய நிலையுடன் இணைத்துப் பார்ப்பதில்லை.

நவீன முதலாளித்துவத்தின் மிக

முக்கியமான அம்சம் என்னவென்றால், அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இரண்டிலுமே தேசிய வருவாயில் உழைக்கும் வர்க்கத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளது. இந்த வீழ்ச்சி எவ்வளவு தூரம் சென்றுள்ளது என்றால், 2011 இல் ஒரு சராசரி அமெரிக்க ஆண் தொழிலாளியின் உண்மையான கூலி, 1968 இல் இருந்ததை விடக்குறைவாக இருந்தது என்று பொருளாதார அறிஞர் ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் குறிப்பிடுகிறார். ஐரோப்பாவிலும், 2022–23 இல் கடுமையாக வீழ்ந்த உண்மையான கூலி, 2024 இன் நான்காம் காலாண்டு வரை அதன் 2021 நிலையை எட்டவில்லை என்று ஐரோப்பிய மத்திய வங்கி கூறுகிறது. உக்ரைன் போரினால் ஜெர்மனியில் ஏற்பட்ட எரிசக்தி நெருக்கடி அந்நாட்டு உழைக்கும் வர்க்கத்தின் துயரத்தை மேலும் அதிகரித்துள்ளது.

பல பத்தாண்டுகளாக நீடிக்கும் நவ தாராளவாத உலகமயமாக்கலால் (Neo-liberal globalization), மூலதனத்தின் தங்குதடையற்ற நகர்வு ஐரோப்பிய நாடுகளது தொழிலாளர்களின் கூலி உயர்வு கோரிக்கைகளைப் பலவீனப்படுத்தியுள்ளது. மூன்றாம் உலக நாடுகளின் மலிவான உழைப்புச் சக்தியோடு போட்டியிட வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். நவ தாராளவாத பொருளாதார ஆட்சியை ஊக்குவித்த தாராளவாத அரசியல் ஆட்சிகள் மீது மேம்பட்ட முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கோபம் மிக முக்கியமானது, நியாயமானது. தீவிர வலதுசாரிகளுக்கும் இடதுசாரிகளுக்கும் இடைப்பட்ட 'நடுத்தர' தாராளவாத அரசியல் சக்திகளின் பலவீனம் இதன் நேரடி விளைவாகும்.

உண்மையில், அமெரிக்காவின் ஹிலாரி கிளிண்டன், பிரிட்டனின் 'நியூ லேபர்', பிரான்சின் மேக்ரான் அல்லது ஜெர்மனியின் பிரெட்ரிக் மெர்ஸ் போன்ற இந்த 'நடுத்தர' சக்திகள் தங்கள் நாட்டு தொழிலாளர்களின் அவலநிலை குறித்து எந்த விழிப்புணர்வும் அல்லது அனுதாபமும் அற்றவர்களாக உள்ளனர். மெர்ஸ் போன்றவர்கள் பிளாக்ராக் (Blackrock) போன்ற நிதி நிறுவனங்களில் பணியாற்றிய பெருநிறுவனங்களின் பிரதிநிதிகள். இதன் காரணமாகவே தொழிலாளர்கள் ஒருபுறம் தீவிர வலதுசாரிகள் அல்லது மறுபுறம் இடதுசாரிகளை நோக்கித் திரும்பியுள்ளனர். பிரித்தானியாவில் ஜெர்மி கோர்பின் அல்லது அமெரிக்காவில் பெர்னி சாண்டர்ஸ் போன்ற இடதுசாரித் தலைவர்கள் தாராளவாதிகளின் சூழ்ச்சியால் முடக்கப்பட்டபோது, தொழிலாளர்கள் பெருமளவில் தீவிர வலதுசாரிகளை நோக்கிச் சென்றனர். பிரான்சில் மட்டுமே ஒரு ஒருங்கிணைந்த இடதுசாரி அணி இத்தகைய சூழ்ச்சிகளை முறியடித்து, தீவிர வலதுசாரி மரின் லெ பென்னை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி வலுவான சக்தியாக உருவெடுத்துள்ளது.

மாற்றத்திற்கான வழி: இடதுசாரித் தலைமீடு

தேசிய வருவாயில் தொழிலாளர்களின் பங்கு குறைவதைத் தடுத்து நிறுத்துவது ஜனநாயகம் பிழைத்திருப்பதற்கான அத்தியாவசிய நிபந்தனையாகும். இதற்கு அரசின் தீவிரமான நிதித் தலையீடு (Fiscal Intervention) தேவை. ஆனால், மூலதனத்தின் மீதான கட்டுப்பாடு இல்லாத உலகில் இத்தகைய தலையீடு சாத்தியமற்றது. ஏனெனில் எந்தவொரு நாடும் அத்தகைய முயற்சியை எடுத்தால், அங்கிருந்து மூலதனம் வெளியேறிவிடும். எனவே, நவதாராளவாத ஆட்சியிலிருந்து வெளியேறாமல் தொழிலாளர்களின் பங்கினை உயர்த்த முடியாது. இதை இடதுசாரிகளால் மட்டுமே செய்ய முடியும். தீவிர வலதுசாரிகள் தொழிலாளர்களுக்குப் பொய் வாக்குறுதிகளை அளிக்கலாம், ஆனால் அவர்கள் இறுதியில் பெருநிறுவன முதலாளிகளின் ஆதரவையே நம்பியிருப்பதால் அந்த வாக்குறுதிகளை நிச்சயம் மீறுவார்கள்.

ஐரோப்பா ஒரு புதிய 'மாதிரியை' வழங்கும் என்று நம்பும் அமெரிக்க தாராளவாத வட்டாரங்கள் இந்த அடிப்படைப் புள்ளியைத் தொடுவதில்லை. அதாவது, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய கீன்சியப் பொருளாதாரம் எனும் கலப்புப் பொருளாதாரம் என்ற பெயரில், பொருளாதாரத்தில் அரசுத் தலையீட்டிற்குப் பிறகு, நவதாராளவாதம் மீண்டும் கொண்டுவந்த முதலாளித்துவத்தின் 'தன்னிச்சையான போக்கு', வருமான சமத்துவமின்மையை அதிகரித்து உழைக்கும் வர்க்கத்தைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இதன் விளைவாகவே தீவிர வலதுசாரிகள் எழுச்சி பெற்றுள்ளனர். மூலதனக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் நவதாராளவாதத்தின் பிடியிலிருந்து பொருளாதாரத்தை மீட்கக்கூடிய இடதுசாரி அரசாங்கங்கள் அமைந்தால் ஒழிய, ஐரோப்பாவால் எந்த 'மாதிரியையும்' வழங்க முடியாது.

ஐரோப்பியப் பொருளாதாரங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமுமே இன்று ஒரு இக்கட்டான கட்டத்தை எட்டியுள்ளன. ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், உழைக்கும் மக்களின் (தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள்) ஆதரவைப் பெற்ற அரசாங்கங்கள் ஆட்சிக்கு வர வேண்டும். ஐரோப்பாவின் செயல்பாடுகளுக்கான தடைகள் ஐரோப்பிய ஒருங்கிணைப்பால் ஏற்பட்டவை அல்ல, மாறாக நவதாராளவாதத்தின் இறுக்கமான பிடியால் ஏற்பட்டவை.

எனவே, ஐரோப்பாவின் இன்றைய நிலை அமெரிக்காவிலிருந்து வேறுபட்டதல்ல. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய வர்க்க சக்திகளின் சமநிலையால் ஐரோப்பா வேறுபட்ட பொருளாதார வரலாற்றைக் கொண்டிருந்தாலும், இன்று நவதாராளவாத முதலாளித்துவத்தின் தாக்கத்தால் அனைத்தும் ஒன்றாகிவிட்டன. டொனால்ட் ட்ரம்ப் தனது வரி விதிப்பு நடவடிக்கைகளின் மூலம் நவதாராளவாதத்தை எதிர்ப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கினாலும், எல்லை கடந்த மூலதனப் புழக்கத்திற்கு அவர் இன்றும் ஆதரவாகவே இருக்கிறார். எனவே, அமெரிக்காவிலிருந்து மாறுபட்ட ஐரோப்பிய 'மாதிரி' என்பதைத் தேடுவதை விட, நவ தாராளவாத முதலாளித்துவத்தை முறியடிப்பதே இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

பீப்பிள்ஸ் டெமாக்ரசி, பெப்ரவரி 22, 2026
தமிழில் சுருக்கம் : எஸ்.பி.ஆர்.

நமது நாட்டில் முதலாளி வர்க்க, குட்டி முதலாளித்துவ சித்தாந்தமும், மார்க்சிய எதிர்ப்பும் இன்னும் நீண்ட காலம் நிலைத்திருக்கும். நமது நாட்டில் சோசலிச அமைப்பு அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. உற்பத்தி சாதனங்களின் உடைமை முறை மாற்றத்திலும் நாம் அடிப்படை வெற்றி ஈட்டியுள்ளோம். ஆனால் அரசியல், சித்தாந்த முன்னணிகளில் நாம் இன்னும் முழு வெற்றி பெறவில்லை. சித்தாந்தத் துறையில், பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தில் 'எது வெல்லும்' என்ற பிரச்சனை உண்மையில் இன்னும் தீர்க்கப்படவில்லை.

–மாவோ

இலங்கை தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூற வேண்டும்!
- ஈரானியத் தூதுவர்

Dr. Alireza Delkhosh

இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்ஹோஸ் (Dr. Alireza Delkhosh) ‘டெயிலி மிரர்’ (0.3.03.2026) பத்திரிகையின் கெலும் பண்டாரவுக்கு அளித்த நேர்காணல்:

கேள்வி: ஈரானின் பார்வையில் இந்தப் போர் எவ்வளவு காலம் தொடரும்?

பதில்: உங்கள் கேள்விக்கு சரியான பதிலைக் கொடுக்க இந்தப் போருக்கான காரணத்தை நாம் பார்க்க வேண்டும். ஈரானுக்கெதிரான இந்தத் தாக்குதலகள் ஏன் நடந்தன? பெப்ருவரி 28 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலிய சியோனிச அரசும் ஈரான் மீது தாக்குதலைத் தொடங்கின.

அவர்கள் பொதுமக்களைக் கொன்று, அவர்களின் வாழ்வைச் சீரழித்து வருகின்றனர். இது சர்வதேச சட்டங்களை முற்றிலும் மீறுவதாகும். நாங்கள் பேச்சுவார்த்தையில் இருந்தபோது இந்தத் தாக்குதல்கள் நடந்தன.

எட்டு மாதங்களுக்கு முன்பு நாங்கள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது, நடுவரான ஓமான் நாடு பேச்சுவார்த்தைகள் நல்லபடி முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறியது. ஆனால் பேச்சுவார்த்தை முடிவுறுவதற்கு முன்னதாக அமெரிக்கா இடைநடுவில் ஈரானைத் தாக்கியது.

இதன் பொருள் பேச்சுவார்த்தையும் அமைதியும் அமெரிக்காவுக்கும், இஸ்ரேலிய சியோனிச ஆட்சிக்கும் அச்சுறுத்தல் என்பதே. எந்தவொரு பிரச்சினைக்கும் அமைதியான தீர்வுகாண அவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்கள் அமைதியான தீர்வை விரும்புவதில்லை, கொல்ல விரும்புகிறார்கள், தாக்க விரும்புகிறார்கள். துரதிஸ்ட்டவசமாக, இதன் காரணமாக இந்தப் போர் எவ்வளவு காலம் தொடரும் என்று எங்களால் சொல்ல முடியாது.

இது ஒரு உண்மையான போர். இது பதற்றம் அல்ல. அவர்கள் ஈரானிய பொதுமக்களையும், நகரங்களிலுள்ள உள்கட்டமைப்புகளையும் நேரடியாகத் தாக்குகிறார்கள்.

காஸா, லெபனான், சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் சமீபத்தில் வெனிசுவேலாவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆபத்தான வடிவத்தை அமெரிக்காவும், சியோனிச ஆட்சியும் இங்கும் முன்வைக்கின்றன.

இன்று இது நமது நாட்டிற்கு நடக்கிறது. நாளை இது வேறு எந்த நாட்டிற்கும் நடக்கலாம். எனவே, எந்தவொரு நாடும் இதுபோன்ற செயல்களிலிருந்து விடுபட்டதாகக் கருதக்கூடாது. இந்த விடயத்தில் ஈரான் கடைசியும் அல்ல, முதலும் அல்ல.

கேள்வி: இரண்டு சக்திகளால் தாக்கப்படும்போது, ஈரானால் இந்தப் போரை எவ்வளவு காலம் தாங்கிக்கொள்ள முடியும்?

பதில்: 47 ஆண்டுகளுக்கு முன்பே நமது எதிரிகளை நாம் அறிந்திருப்பதால், நாம் நன்கு தயாராக இருக்கிறோம். இதன் அர்த்தம் எதிர்ப்பை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதாகும். நமது இராணுவம் மற்றும் ஆயுதப்படைகள் நன்கு தயாராக உள்ளன. இந்தப் போரை 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என எமது ஆயுதப் படைகளின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

கேள்வி: ரஸ்யா மற்றும் சீனா போன்ற ஈரானின் நட்பு நாடுகள் ஈரான் மீதான தாக்குதலைக் கண்டித்துள்ளன. ஆனால், அதே நேரத்தில், வன்முறையை நிறுத்துமாறு அவர்கள் கேட்டுள்ளனர். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: போரை ஆரம்பித்த நாடு நாங்கள் அல்ல. அமெரிக்காவும் இஸ்ரேலும் தான் முதலில் எங்களைத் தாக்கின. போரை ஆரம்பிக்காமல் இருக்க நாங்கள் கடுமையாக முயற்சித்தோம். அதன் காரணமாக பேச்சுவார்த்தைக்கும் சென்றோம். பிரச்சினையை பேசித்தீர்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டோம்.

அதனால்தான் இரு தரப்பினரும் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாடுகள் கூறும்போது அது ஈரான் அல்ல என்று அர்த்தம்.

நாம் இப்போது நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஐ.நா.சபையின் சட்டப்பூர்வ பாதுகாப்பு குறித்த கொள்கையின் அடிப்படையில் நாம் நம்மைத் தற்காத்துக் கொள்கிறோம். மற்றத் தரப்பினர் எம்மைத் தாக்குகின்றனர். யாராவது நிறுத்துவது என்றால், அது ஈரான் அல்ல. நம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு நமக்கு சட்டபூர்வமான உரிமை உண்டு.

கேள்வி: துருக்கி போன்ற ஏனைய இஸ்லாமிய நாடுகளும் வன்முறையை நிறுத்தும்படி அழைப்பு விடுத்துள்ளன. ஈரான் மற்றைய இஸ்லாமிய நாடுகளைத் தாக்கியதால் அவை இவ்வாறு கூறுகின்றனவா?

பதில்: ஈரான் அதன் அண்டை நாடுகளுடனான நட்புறவில் உறுதியாக உள்ளது. இருப்பினும், நமது அண்டை நாடுகளில் உள்ள பயங்கரவாதத் தளங்கள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறது.

ஈரானில் உள்ள அப்பாவி குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்களைச் செய்யும் எதிரிகளுக்கு அண்டை நாடுகள் தளங்களாக மாறக்கூடாது என நாம் எதிர்பார்க்கிறோம். நாங்கள் அண்டை நாடுகளைத் தாக்குவதில்லை. எங்கள் அண்டை நாடுகளில் அமைந்துள்ள எங்கள் எதிரிகளின் தளங்களையே நாம் தாக்குகிறோம்.

எங்கள் அண்டை நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களிலிருந்து எங்கள் மீது தாக்குதல் நடந்தால், நாங்கள் நேரடியாக அந்தத் தளத்தை தாக்குவோம் என எச்சரித்தோம். எனவே, அண்டை நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்கள் மீதான எங்கள் தாக்குதல்கள் எமது அண்டை நாடுகள் மீதான தாக்குதல்கள் என்று அர்த்தமல்ல. நாங்கள் எங்கள் எதிரிகளையே தாக்குகிறோம். நமது அண்டை நாடுகள் தமது நாடுகளில்

இருந்து எமது எதிரி செயல்படுவதற்கு அனுமதிக்காவிட்டால், நாங்கள் அந்தத் தளங்களைத் தாக்குவதை ஒருபோதும் செய்ய மாட்டோம்.

கேள்வி: உலகளாவிய எண்ணெய் போக்குவரத்தில் 20 சதவீதம் நடைபெறும் ஹார்முஸ் நீரிணையின் தற்போதைய நிலைமை என்ன?

பதில்: எங்கள் தேசிய நலன்களுக்காக ஹார்முஸின் ஒரு பகுதி இப்போது மூடப்பட்டுள்ளது. எங்கள் தேசிய நலன்கள் காரணமாக, ஈரானின் அனுமதியின்றி ஹார்முஸ் நீரிணை வழியாக கடற்படைகள் மற்றும் கப்பல்கள் சுதந்திரமாகச் செல்வதை அனுமதிக்க முடியாது.

இப்போது நாங்கள் ஒரு போர்ச் சூழ்நிலையில் இருக்கிறோம். சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில், நாடுகள் நீரிணைகளில் சில சிறப்பு மேலாண்மைகளைச் செய்யலாம். எனவே, எதிரிகள் இந்த நீரிணை வழியாகச் செல்வதை அனுமதிக்க முடியாது. எதிரிகளுக்குச் சொந்தமில்லாத பிற கப்பல்களுக்கும் ஆபத்து இருப்பதால் அவற்றையும் அனுமதிக்க முடியாது. ஏனெனில், அந்தக் கப்பல்களுக்கு எதிரிகளிடமிருந்து எந்த நேரத்திலும் தாக்குதல் நிகழலாம். இந்த நீரிணையின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு நாங்களே பொறுப்பு.

எனவே, இந்தப் போர் முடியும் வரை, கப்பல்கள் இந்த நீரிணை வழியாகச் செல்வதை அனுமதிக்க முடியாது.

கேள்வி: உலகளாவிய வர்த்தகத்தில் அதன் தாக்கம் குறித்த உங்கள் மதிப்பீடு என்ன?

பதில்: அமெரிக்காவும் இஸ்ரேலும் அனைத்து சர்வதேச சட்டங்களையும் மீறுவதால், உலகளாவிய பொருளாதார சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என நாங்கள் அனைத்து நாடுகளுக்கும் பலமுறை தெரிவித்துள்ளோம்.

உலகின் இந்தப் பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாங்கள் அறிவோம். இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் மத்திய கிழக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் காரணமாக, இந்தப் பகுதியில் எந்தப் போரும் நடக்காமல் இருப்பதைப் பார்த்துக்கொள்ள நாங்கள் பலமுறை முயற்சித்துள்ளோம்.

ஆனால், நாங்கள்தான் பாதிக்கப்பட்டவர்கள். இந்தத் தாக்குதல்களுக்கும் போருக்கும் நாங்கள் ஆரம்பகர்த்தாக்கள் அல்ல. நாங்கள் எங்களைத் தற்காத்துக் கொள்ளவே முயற்சிக்கிறோம். எங்களது எதிர்த்தரப்பினர் தாக்குதல்களை நிறுத்தும் வரை எங்களுக்கு வேறு வழியில்லை.

கேள்வி: வன்முறையை நிறுத்துவதற்கு நீங்கள் என்ன நிபந்தனையை விதிக்கிறீர்கள்?

பதில்: இந்தப் போரை நிறுத்துவதற்கான எங்கள் நிபந்தனைகள் குறித்து நான் எதுவும் சொல்ல முடியாது.

இது உண்மையில் ஒரு போர். இரண்டு நாடுகளின் தாக்குதல்கள். நான் இரண்டு ஆட்சிகளைக் குறிக்கிறேன். ஏனென்றால், இஸ்ரேலிய அமைப்பை நாம் ஒரு நாடாகவோ அல்லது அரசாங்கமாகவோ அங்கீகரிக்கவில்லை. அவர்கள் எம்மைத் தாக்குகிறார்கள். இது ஒரு போர்.

இது வன்முறை அல்ல. இந்தப் போரை நிறுத்துவதற்கான நிபந்தனைகளை நான் சொல்ல முடியாது. ஆனால் ஈரானிய அதிகாரிகள் அதைச் செய்யும் நிலையில் உள்ளனர். ஆனால், இப்போது வரை ஈரானிய அதிகாரிகள் போரை நிறுத்தத் தயாராக இல்லை என்று கூறுவதை நான் அறிவேன். நாங்கள் எம்மைத் தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால், போரை நிறுத்துவது குறித்து பேசுவதற்கான நேரமல்ல இது.

கேள்வி: இலங்கை அணிசேராக் கொள்கையை கொண்ட ஒரு நாடு. தற்போதைய சூழ்நிலையில் இலங்கை என்ன செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: ஓம், இலங்கை ஒரு நடுநிலை நாடு. ஆனால், அதற்காக சர்வதேச சட்டத்தை மீறுவது குறித்து இலங்கை அமைதியாக இருக்க வேண்டும் என்று அதற்கு அர்த்தம் அல்ல. நடுநிலைமை என்பது இந்த நாடு ஒரு போரில் ஒரு தரப்பினருடன் இணைந்து செயல்படக்கூடாது என்பதாகும். ஆனால், அடிப்படை சர்வதேச விதிமுறைகள் மீறப்படுவதைக் காணும்போது நாம் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல.

ஈரானில், காசாவில் குழந்தைகள் கொல்லப்படுவதைப் போன்று கொல்லப்படுவதை இலங்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதா என்பதை இலங்கை அரசு தெளிவாகத் தெரிவிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இலங்கை ஒரு நடுநிலை நாடு என்று சொல்லப்படும் போது, இந்த நாடு காஸாவில் படுகொலைகளைக் காணும் போது, அது அமைதியாக இருக்க வேண்டுமா?

தற்போது ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் அமெரிக்கா ஈரானிய மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களில் 180 இற்கும் அதிகமானோரைக் கொலை செய்தது. நடுநிலைமை என்றால் இந்த நாடு அமைதியாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

கேள்வி: சமீபத்தில் உங்கள் வெளியுறவு அமைச்சரை இலங்கை வெளியுறவு அமைச்சர் தொடர்பு கொண்டார். அந்த நேரத்தில் என்ன பேசிக்கொண்டார்கள்?

பதில்: இந்த உரையாடல் பலதரப்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பு பற்றியது. கடந்த பல நூற்றாண்டுகளாக இலங்கையுடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது.

ஈரானில் இலங்கை மக்களை நாம் மிகவும் மதிக்கிறோம். ஏனெனில் அவர்கள் உயர் கல்வி கற்றவர்கள். அவர்கள் மிகவும் நாகரிகமான மக்கள். எமது வெளியுறவு அமைச்சர் தனது இலங்கை சகாவிடம் பிராந்திய பிரச்சினைகளின் சமீபத்தைய வளர்ச்சியை விளக்கினார்.

கேள்வி: தற்போதைய நிலைமை இலங்கையின் ஈரானுடனான தேயிலை வர்த்தகத்தில் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தும். அதுபற்றி உங்களுக்கு ஏதாவது கருத்து இருக்கிறதா?

பதில்: எங்கள் தரப்பிலிருந்து எந்தத் தடையும் இல்லை. தேயிலை வரத்தகத்தில் இந்த ஒத்துழைப்பைத் தொடர்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இது குறித்து இலங்கை தான் முடிவு செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

கேள்வி: தற்போது பண்டமாற்று வர்த்தகம் நடைபெற்று வருகிறது. அது தொடருமா?

பதில்: ஓம். இந்தப் பிரச்சினை குறித்து எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இருக்கிறது. இப்போது இலங்கை தரப்பு திருப்பிச் செலுத்துவது குறித்த அதன் உறுதிப்பாட்டைத் தொடர

வேண்டும்.

கேள்வி: ஈரானின் அணுசக்தித் திட்டத்தைப் பொறுத்தவரை, நீங்கள் அமைதியான வழிமுறைகளுக்கு அப்பாற்பட்டு யுரேனியத்தை செறிவூட்டியுள்ளீர்கள். அதன் தற்போதைய நிலை என்ன?

பதில்: எட்டு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரான் மீது குண்டு வீசியது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அப்போது அவர் என்ன சொன்னார்? எல்லாவற்றையும் அழித்துவிட்டதாகவும், ஈரானுக்கு அணுசக்தி நடவடிக்கைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் கூறினார்.

இது உண்மையானால், இப்பொழுது அமெரிக்காவின் கவலை என்ன?

அவர் ஒருமுறை அல்ல, இரண்டுமுறை அல்ல, பலமுறை அவ்வாறு கூறினார். அவர் சொன்னது அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது அவர், ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது என்று கூறுவது பொய்யா அல்லது முன்பு கூறியது பொய்யா? எது பொய்?

நேர்மையாகச் சொன்னால், எங்கள் கொள்கை ரீதியிலான நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் மாறவில்லை. நாங்கள் இராணுவ ரீதியிலான அணுசக்தி நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டோம். எங்கள் அனைத்து அணுசக்தி நடவடிக்கைகளும் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் (IAEA) மேற்பார்வையின் கீழேயே நடத்தப்படுகின்றன. நாங்கள் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT) உறுப்பினர்கள்.

யாராவது உங்களைக் கவலையடையச் செய்தால், அது ஈரான் அல்ல, அது இஸ்ரேல். இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் உள்ளன. இஸ்ரேல் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் உறுப்பினர் அல்ல. இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் உள்ளதால், அதுதான் சர்வதேச ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலான நாடு, நாங்கள் அல்ல.

எங்களிடம் எந்த அணு ஆயுதங்களும் இல்லை. நாங்கள் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் மேற்பார்வையில் இருக்கிறோம். எனவே, சர்வதேச ஸ்திரத்தன்மை மற்றும் அமைதிக்கு யார் அச்சுறுத்தல்? ஈரானா அல்லது இஸ்ரேலா என்பது எனது கேள்வி.

கேள்வி: உங்கள் உயர்மட்ட விஞ்ஞானிகளில் சிலர் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அதனால் உங்கள் அணுசக்தி திட்டத்துக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டதா?

பதில்: அணுசக்தி செயல்பாடு என்பது அறிவு. அது உள்கட்டமைப்பு அல்ல. அணுசக்தியின் அமைதியான நடவடிக்கைகள் பற்றிய மிக முக்கியமான விடயம் மக்களின் மனதில் உள்ளது. அது அறிவு. இது உள்கட்டமைப்பை கட்டுவது தொடர்பானது அல்ல.

அறிவு ஈரானிய விஞ்ஞானிகளின் மனதில் உள்ளது. அவர்களில் சிலரே அமெரிக்க – சியோனிச ஆட்சிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

கேள்வி: இந்தப் போர் சூழ்நிலையில், ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் கேடயமாகச் செயல்படும் இரும்புக் குவிமாடம் ஈரானிடம் இல்லை. இந்தப் போரில் நீங்கள் ஏற்படுத்தக்கூடிய சேதம் குறைவாகவே உள்ளது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்கள் எங்களிடம் உள்ளன. இஸ்ரேலின் தலைநகர் டெல்அவிவ் மற்றும் அதன் வேறு சில நகரங்களின் நிலைமையை நீங்கள் காண்கிறீர்கள். இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்பை நாங்கள் உடைத்து வருகிறோம். அந்த அமைப்பு ஒரு நல்ல அமைப்பாக இருந்தால், நாம் அதைத் தாக்க முடியாது.

கேள்வி: தூதரே, ஒட்டுமொத்த சூழலில், பிராந்திய அமைதிக்கு ஈரான் எவ்வாறு பங்களிக்க விரும்புகிறது?

பதில்: கடந்தகால அனுபவத்தின்படி, ஈரான் இந்தப் பிராந்தியத்தில் நிலைத்தன்மை மற்றும் அமைதிக்கு உறுதிபூண்டுள்ள முக்கிய நாடுகளில் ஒன்றாக இருந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். ஹார்முஸ் நீரிணையின் உறுதியற்ற தன்மையை உருவாக்கியதாக எம்மீது எந்தப் புகாரும் இல்லை. மாறாக, பிராந்தியத்தில் ஒரு சக்திவாய்ந்த நாடாக, நீரிணையின் பாதுகாப்பு மற்றும் அமைதியான செயல்பாட்டை நாங்கள் உத்தரவாதம் செய்கிறோம்.

வரலாற்று ரீதியாக, ஈரான் மற்றொரு நாட்டை ஆக்கிரமித்த அல்லது தாக்கிய எந்தவொரு நிகழ்வையும் நீங்கள் காண முடியாது. அத்தகைய ஆக்கிரமிப்புக்கான பதிவு எதுவும் இல்லை.

நாங்கள் எங்களை மட்டுமே பாதுகாத்துக் கொண்டோம். எனவே, பிராந்திய ஸ்திரத்தன்மை குறித்து எந்தக் கவலையும் இருக்கக்கூடாது. இந்தப் பிராந்தியத்தைச் சேராத நாடுகள், இந்தப் பிராந்தியத்தின் விவகாரங்களில் தலையிடுவதைத் நிறுத்த வேண்டும்.

கேள்வி: ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் போன்ற ஆயுதக் குழுக்களின் இருப்பு குறித்து என்ன சொல்கிறீர்கள்? அவர்கள் ஈரானின் பிரதிநிதிகள் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளனவா?

பதில்: இல்லை, அவர்கள் ஈரானின் பிரதிநிதிகள் அல்ல. சில குழுக்கள் ஈரான் மீது அனுதாபம் கொண்டிருக்கலாம், அது வேறுபட்டது.

ஒரு பிரதிநிதி என்றால் நாம் உத்தரவுகளை வழங்குவோம். அவர்கள் அதற்கேற்ப செயல்படுவார்கள். அதுதான் பிரதிநிதி உறவின் வரையறை. நாங்கள் யாரையும் நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடுவதில்லை.

5ம் பக்கத்தொடர்ச்சி...

கப்பல் நடமாடுவதும் உலகின் இந்தப் பகுதியிலுள்ள சர்வதேச வர்த்தகப் பாதைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. இதனால்தான் இந்தியப் பெருங்கடலில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகள் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு முக்கியமானதாகிறது.

இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார வலயத்தில் உள்ள மற்றுமொரு ஈரானியக் கடற்படைக் கப்பலும் ஆபத்தில் உள்ளதா என்றும், அது இலங்கை கடல் எல்லைக்குள் நுழைய அனுமதி வழங்கப்படுமா என்றும் எதிர்க்கட்சிகள் கேட்டபோது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நழுவல் பதில்களையே அளித்தது. ஆபத்தில் இருக்கும் மற்றொரு ஈரானியக் கப்பல் (IRIS Bushehr) அதன் நிர்க்கதிக்கு விட்டுவிடப்படாமல் இருப்பதை உறுதி செய்ய இலங்கைக்கு நாகரீக உலக நாடுகள் உதவ வேண்டும். அத்துடன் சுயநீதி பேசும் இவர்களின் கொடூரத்தை சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்க வேண்டும்.

– 'தி ஐலண்ட்' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம், மார்ச் 6, 2026

(குறிப்பு: IRIS Bushehr என்ற ஈரானியக் கப்பலை இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைய இலங்கை அரசு அனுமதித்தது)

ஆசியாவின் அரசியல் பொருளாதாரத்தை நோக்கி

உலகப் பொருளாதாரத்தின் ஈர்ப்பு மையம் ஆசியாவை நோக்கி நகர்ந்து வருகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளல் அதிகரித்து வருகிறது.

உலக மக்கள் தொகையில் சுமார் 60 சத வீதத்தினருக்கு தாயகமாக இருக்கும் இந்தக் கண்டம், உலகப் பொருளாதார வளர்ச்சியில் 70 சத வீதத்தையும், உலக வணிக வர்த்தகத்தில் 40 சத வீதத்தையும், உலக உற்பத்தி மதிப்புக் கூட்டலில் 57 சத வீதத்தையும் பங்களிக்கிறது.

தென் கிழக்காசிய நாடுகளின் சங்கம் (Asean), சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Corporation), மற்றும் ஆசிய – பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு (Asia - Pacific Economic Corporation) போன்ற அமைப்புகள் ஆசிய பிராந்தியவாதத்தை நோக்கிய போக்கைக் குறிக்கின்றன. ஆசியாவை மையமாகக் கொண்ட பிராந்திய பொருளாதாரக் கூட்டாண்மை உலகின் மிகப்பெரிய சுதந்திர வர்த்தகக் கூட்டாகும்.

உண்மையில், ஆசியாவின் சுறுசுறுப்பு உலகளாவிய தெற்கில் புதிய மனநிலையை உயிர்ப்பிக்கிறது என்ற ஒரு வாதத்தை முன்வைக்கலாம். 10 ‘பிரிக்ஸ்’ (BRICS) உறுப்பு நாடுகளில் 5 ஆசியக் கண்டத்தில் உள்ளன. (ஆசியா மற்றும் ஐரோப்பாவையும் உள்ளடக்கியுள்ள ரஸ்யாவையும் சேர்த்தால் 6) பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் மக்கள் தொகையில் அண்ணளவாக 83 சத வீதமும், மொத்த உள்நாட்டு உற்பத்தில் 82 சத வீதமும் ஆசியாவைச் சேர்ந்தவை.

“உற்பத்தி முறைகள், உற்பத்திச் சங்கிலிகள் மற்றும் பொருளாதார நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள் ஆழமாகப் பிணைக்கப்படாவிட்டால், அவற்றுக்கிடையேயான ஒத்துழைப்பை நிலைநிறுத்த முடியாது” என சீன இதழான ‘வென்ஹூவா சோங்ஹெங்’கின் நிறுவனரும் ஆசிரியருமான யாங் பிங் கூறுகிறார்.

2025 உலகளாவிய தெற்கு கல்வி மன்றத்தின் ஒரு பகுதியாக, சாங்காயில் நடைபெற்ற ‘ட்ரைகான்டினென்டல்’ ஆசிய தலைமீட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய யாங் பிங், தொழில்துறை சங்கிலிகளின் ஒருங்கிணைப்புக் காரணமாக, ஐரோப்பாவில் இதுவரை நீண்ட காலமாக நீடித்த பிராந்திய பொருளாதார தொழிற்சங்கங்கள் – சோசலிச COMECON தொகுதி மற்றும் முதலாளித்துவ ஐரோப்பிய ஒன்றியம் – உள்ளன எனச் சுட்டிக் காட்டினார்.

சீரான இளன்பெரும

இருப்பினும், ஆசியாவில் ஒருங்கிணைப்பு, சீரற்ற வளர்ச்சி மற்றும் வலுவான பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் காரணமாக கலவையாகவே உள்ளன.

1972 இல் எகிப்திய மார்க்சிய அறிஞரான சமீர் அமின், சர்வதேச தொழிலாளர் பிரிவில் ஒதுக்கப்பட்ட பொருளாதார செயல்பாடுகளின் அடிப்படையில் ஆபிரிக்க கண்டத்தை நான்கு மண்டலங்களாக வகைப்படுத்தினார். அவை: மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவின் காலனித்துவ வர்த்தகப் பொருளாதாரங்கள், கொங்கோ நிதிப் படுகையின் சுரங்க சலுகைகள், கிழக்கு மற்றும் தென்னாபிரிக்காவின் தொழிலாளர் இருப்புக்கள், நிலப்பிரபுத்துவ எத்தியோப்பியா போன்ற வெளி மாநிலங்கள் என்பனவாகும்.

சமீர் அமினிடமிருந்து கடன் வாங்கி, ஆசியாவைப் புரிந்துகொள்ள இதே போன்ற ஒரு முறையைப் பயன்படுத்தலாம்.

கிழக்காசியா தொழிற்துறை மையமாகும். இந்தப் பிராந்தியத்தில் தொழில்மயமாக்கப்பட்டுள்ள முதல் ஐரோப்பிய நாடு அல்லாத ஜப்பான் உள்ளது. அத்துடன், உலகளாவிய உற்பத்தி மதிப்பில் 30 சத வீதத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்ட சீனாவும் உள்ளது. உலகின் முக்கியமான 44 முக்கியமான தொழில்நுட்பங்களில் 37 இல் சீனா முன்னணியில் உள்ளது.

தென்கிழக்கு ஆசியா ஏற்றுமதிப் பொருளாதாரங்களாக மாறிய காலனித்துவ வர்த்தகப் பொருளாதாரங்களைக் கொண்டுள்ளது. ஆனால், உற்பத்தித் திறன்கள் அதிகரித்து வந்தாலும், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் உள்நாட்டுத் தொழில்நுட்பமும், உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த நிறுவனங்களும் இல்லை. இந்தப் பொருளாதாரங்கள் பலவற்றில், நிலச் சீர்திருத்தங்கள் முழுமையடையாமல் உள்ளன. சமத்துவமின்மையும் அதிகமாக உள்ளது. அதன் காரணமாக உள்நாட்டுச் சந்தையின் ஆற்றல் குறைவாக உள்ளது.

தெற்காசியா உலகளவில் வடக்கு மற்றும் வளைகுடா நாடுகளுக்கு தொழிலாளர்களை வழங்கும் இருப்புத்துறையாக இருக்கின்றது. காலனித்துவ காலத்தில் இருந்ததை விட அதன் பங்கு சிறிது மாறியுள்ளது. துணைக்கண்டம் காலனித்துவ அரசுக்கு கூலிகள், சிப்பாய்கள் மற்றும் நிர்வாகிகளை வழங்கியது.

பங்களாதேஸ், நேபாளம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரங்கள் இன்னமும் பணம் அனுப்புவதைச் சார்ந்தே உள்ளன.

மத்திய ஆசியா இயற்கை வளங்களையே அதிகமாகச் சார்ந்திருக்கிறது. எண்ணெய், எரிவாயு, யுரேனியம் மற்றும் நீர் மின்சாரம் போன்ற ஆற்றல்கள் காரணமாக, இந்தப் பகுதி மூலோபாய ரீதியாக

முக்கியமானது. பசுமை மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களுக்கான போட்டியில் அதற்குத் தேவையான முக்கியமான கனிம வளங்கள் இங்கு நிறைந்துள்ளன.

இறுதியாக, மேற்கு ஆசியாவை எடுத்துக் கொள்வோம். இது வளைகுடா ஒத்துழைப்புச் சபையின் பெட்ரோ – டொலர் (Pedro - Dollar) வாடகைதாரர்களால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இந்த நாடுகள் எண்ணெய் விற்பனையில் 28 சத வீதத்தைக் கொண்டுள்ளன. அத்துடன் அமெரிக்க இராணுவ –தொழிற்துறை – நிதித் துறைகளில் அந்த வருமானத்தை மறுசுழற்சி செய்கின்றன.

போர்கள், படையெடுப்புகள், தடைகள் மற்றும் உள்ளூர் உயரடுக்கினரின் சரணடைதல் காரணமாக சுய வளர்ச்சிக்கான முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன. ஆசியாவிலும், உலகின் தெற்கின் பிற பகுதிகளிலும் ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பராமரிப்பதற்கு இந்தப் பிராந்தியத்தில் இராணுவ – பெட்ரோலியம் – நிதி என்பனவற்றின் இணைப்பு முக்கியமானது.

ஆனால், ஆசியாவின் வளர்ச்சியின் சீரற்ற தன்மையும் ஒரு பலமாகும். பிராந்திய மைய வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களையும் இந்தக் கண்டம் தன்னுள் கொண்டுள்ளது. உழைப்பு, இயற்கை வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் மூலதனம் என அவற்றைக் குறிப்பிடலாம்.

மேலே குறிப்பிட்ட ஐந்து மண்டலங்களுக்கு மேலதிகமாக ஆசியாவில் ஏகாதிபத்தியத்தின் 'முன்னோக்கிய தளங்கள்' உள்ளன. இவற்றில் குடியேறிகளின் காலனிகள் (இஸ்ரேல், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து) மற்றும் இராணுவ ரீதியாக ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது இணக்கமான நாடுகள் (யப்பான், சீனாவின் தாய்வான் மாகாணம், தென் கொரியா மற்றும் துருக்கி) ஆகியவை அடங்கும்.

ஆசியாவின் கிழக்கு மற்றும் மேற்கு பக்கவாட்டில் அமைந்துள்ள இந்த நாடுகள், மேற்கத்தைய மூலதனத்தின் நலன்களுக்காக பிராந்தியத்தை ஸ்திரமின்மைக்கு ஆளாக்கி, சீர்குலைப்பாளர்களாகச் செயல்படுகின்றன. ஆசியாக் கண்டத்தில் உள்ள நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவத் தளங்களுக்கு அவை அனுசரணையாக இருக்கின்றன.

இந்த இராணுவ சுற்றிவளைப்புடன், நிதி அடிபணிதல் இணைந்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்ட "ஆசிய பொருளாதார ஒருங்கிணைப்பு அறிக்கை – 2025", ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்திற்குப் பிறகு ஆசியா உலகின் இரண்டாவது மிகவும் ஒருங்கிணைந்த பிராந்தியம் எனக் குறிப்பிடுகிறது. வங்கியின் கருத்துப்படி, பிராந்திய ஒருங்கிணைப்பு குறியீட்டில் ஆசியா, வர்த்தகம், மக்கள் நடமாட்டம் மற்றும் வெளிநாட்டு முதலீடு என்பனவற்றில் சிறப்பாகச் செயல்படுகிறது. இருப்பினும், நிதித்துறையில் ஆசியாவின் ஒருங்கிணைப்பு மிகவும் பலவீனமாக உள்ளது.

மேற்கு ஆசிய ஹைட்ரோ கார்பன்களுக்கும் அமெரிக்க டொலருக்குமான ஒருங்கிணைப்பு, அதேபோல, கிழக்கு மற்றும் தெற்கு ஆசியாவின் தொழில்துறையின் நோக்குநிலை வடக்கின் சந்தைகளை நோக்கி இருப்பது, டொலர் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதை உறுதி செய்கிறது. இது உலக இருப்பு நாணயத்தைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க சமஸ்டி ரிசேர்வ் அமைப்பின் நடவடிக்கைகளுக்கு இப்பகுதியை பாதிக்கக்கூடியதாக ஆக்குகின்றது. நிதி அடிப்படையில் ஆசியா, இன்னமும் வொசிங்டன் மற்றும் வோல் ஸ்ரீட்டுக்கு ஆராதனை செய்து வருகிறது.

இரண்டாம் உலக யுத்த முடிவில் ஜேர்மனியில் உள்ள ரீச்ஸ்டாக் மீது சோவியத் கொடியை ஏற்றிப் பறக்கவிட்ட இராணுவ வீரர் ஒரு ஆசிய நாட்டவர். அவர் இன்றைய கஜகஸ்தானில் உள்ள கிர்கிஸ் தன்னாட்சி சோசலிச சோவியத் குடியரசைச் சேர்ந்த ரகீம்ஜன் கோஸ்கர்பேவ் என்பவராவார். இரவில் நடந்த இந்த நிகழ்வின் புகைப்படங்கள் எதுவுமில்லை. யேவ்ஜெனி கல்தேயின் 'ரீச்ஸ்டாக் மீது ஒரு கொடியை உயர்த்துதல்' என்ற படம், இந்தத் தருணத்தின் ஒரு கலை மறு உருவாக்கம் மட்டுமே. புகைப்படத்தில் கோஸ்கர்பேவ் இருக்க முடியாது.

'ட்ரைகொன்டினென்டல் இன்ஸ்ரிரியூட் ஒஃப் சோசியல் ரிசேர்ச்' நடத்திய சமீபத்தைய ஆய்வு, இரண்டாம் உலகப் போரின் அல்லது உலக பாசிச எதிர்ப்புப் போரின் 'மறுசீரமைப்பு' வரலாற்றைக் குறிக்கிறது. இந்தப் போரில், ஆசியாவின் பங்கு வடக்கு உலகால் அழிக்கப்பட்டு, ஆசியாவின் சில பகுதிகளிலும் கூட மறக்கப்பட்டுள்ளது.

உலக பாசிச எதிர்ப்புப் போரில் சுமார் 35 சத வீத இறப்புகள் சீனா, டச்சு கிழக்குத் தீவுகள், பிரெஞ்சு இந்தோ சீனா மற்றும் பிலிப்பைன்சில் நிகழ்ந்தன. இதில் சோவியத் யூனியனைச் சேர்ப்பது பங்கை 66.5 சத வீதமாக உயர்த்துகிறது.

இரண்டாம் உலகப் போரின் உண்மையான தொடக்கம் 1931 ஆம் ஆண்டு மார்கோ போலோ பாலத்தில் நடந்த சம்பவத்துடன் ஆரம்பமாகியது என இந்த ஆய்வு வலியுறுத்துகிறது. இது சீனாவில் யப்பானிய இராணுவவாதத்தின் முன்னேற்றத்தைக் குறித்தது.

ஆசியாவின் வரலாற்றை காலனித்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பனவற்றின் தளமாக மீட்டெடுப்பது, ஆசியாவைக் கோட்பாட்டளவில் உருவாக்கத் தொடங்க அனுமதிக்கிறது.

உற்பத்தியை உலகமயமாக்குதல் மற்றும் தேசிய எல்லைகளை உடைத்தல் ஆகியவற்றில் முதலாளித்துவம் தொடர்ந்து முனைந்தாலும், இந்த அமைப்பு செயல்பட தேசிய அரசுகள் மற்றும் பிராந்திய எல்லைகளையே நம்பியிருக்கிறது என யாங் பிங் குறிப்பிடுகிறார்.

உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் மையம் மற்றும் சுற்றளவு, மேல்நிலை மற்றும் கீழ்நிலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இலாபங்கள் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என்பதன் காரணமாக, முதலாளித்துவ உலகமயமாக்கல் அடிப்படையில் உடையக்கூடியது என அவர் வாதிடுகிறார்.

"இன்று நாம் உலகமயமாக்கல் எதிர்ப்பு அலையைக் காண்கிறோம். முதலாளித்துவம் உலகமயமாக்கலுக்கு எதிரான கட்டத்தில், இந்தக் கண்ணோட்டத்தில், பல்வேறு நாடுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முதலாளித்துவத்தின் திறன், வளர்ந்து வரும் தடைகளை எதிர் கொள்கிறது" என யாங் பிங் கூறுகிறார்.

"முதலாளித்துவத்தை விட உயர்ந்த ஒரு உற்பத்தி முறை மற்றும் சமூக ஒழுங்கமைப்பைக் கண்டுபிடிக்காமல், அல்லது பொருளாதார மற்றும் அரசியல் ஒருங்கிணைப்பின் ஆழமான பொறிமுறைகளைக் கண்டுபிடிக்காமல், முதலாளித்துவ கட்டமைப்புகளைக் கடந்து மண்டலங்கள் அளவிலான சங்கங்களை உருவாக்குவது மிகவும் கடினம்."

(சிரான் இலன்பெருமா ஒரு இலங்கை பத்திரிகையாளரும், அரசியல் பொருளாதார நிபுணரும் ஆவார்)

முன்பக்கத்தொடர்ச்சி...

மேலாக தனது காலனித்துவ ஆட்சியை நடத்தி வந்த பிரித்தானியா, இலங்கை மீது விசேட கவனம் செலுத்தி வந்தது.

இரண்டாம் உலக யுத்தம் முடிவுற்ற சூழலில், பிரித்தானியா பலவீனமடைந்து தென்னாசியாவில் இலங்கை உட்பட தான் வைத்திருந்த காலனி நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை உருவான போது, அதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை உடனடியாகவே புதிதாக உருவெடுத்திருந்த ஏகாதிபத்தியமான அமெரிக்கா எடுத்துக் கொண்டது.

அதன் காரணமாக, சோவியத் யூனியனுக்கு எதிராக மேற்கு முதலாளித்துவ நாடுகளின் இராணுவக் கூட்டணியான "நேட்டோ" (NATO) அமைப்பை உருவாக்கியது போல, மன்னர் பௌலவி சா தலைமையில் ஈரானில் இருந்த அரசை மையமாக வைத்து "சீட்டோ" (SEATO) என்ற இராணுவ கூட்டணி ஒன்றையும் உருவாக்க அமெரிக்கா முயன்றது. ஆனால் அது வெற்றி பெறவில்லை. (இன்று அமெரிக்காவில் வாழ்ந்து வரும் காலஞ்சென்ற மன்னர் சாவின் மகனின் தலைமையில் ஓர் அரசை ஈரானில் உருவாக்குவதும் அமெரிக்கா ஈரான் மீது நடத்தும் போரின் நோக்கங்களில் ஒன்றாகும்)

அது மாத்திரமின்றி, இந்து சமுத்திரத்தில் உள்ள டியாகோகார்சியா தீவில் பிரித்தானியா அமைத்திருந்த இராணுவத்தளத்திலும் அமெரிக்கா சில வசதிகளைப் பெற்றுக் கொண்டது. (அமெரிக்கா கடந்த காலங்களில் ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும், தற்போது ஈரானில் நடவடிக்கைகளில் ஈடுபடும் போதும், இந்த டியாகோகார்சியா தீவிலுள்ள இராணுவத்தளத்தை கணிசமான அளவு பயன்படுத்தி வந்தது, வருகின்றது)

மறுபக்கத்தில், இந்தியாவில் இந்திராகாந்தி பிரதமராக இருந்த காலத்தில், இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. (இந்த ஒப்பந்தம் வழங்கிய பலத்தை வைத்துக்கொண்டே, இந்தியா பங்களாதேஸ் பிரச்சினையில் தலையிட்டு, 1971 இல் பங்களாதேஸ் என்ற புதிய நாட்டை உருவாக்கியது) இதன் மூலம் அமெரிக்க – சோவியத் பனிப்போர் மேலும் உக்கிரம் அடைந்தது. அதன் பிரதிபலிப்பு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தீவிரமாக இருந்தது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டு வந்த இந்த வல்லரசு மோதல் போக்கை இலங்கையில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் இருந்த 'மக்கள் முன்னணி' அரசு கடுமையாக எதிர்த்தது. (பாகிஸ்தானில் இந்தியா மூலம் சோவியத் யூனியன் தனக்கு ஏற்படுத்திய இழப்பை ஈடு செய்வதற்காகவே அமெரிக்கா, ஜே.வி.பி. இன் ஆயுதக் கிளர்ச்சி மூலம் இலங்கையில் இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசை 1971இல் தூக்கியெறிய முயன்றது என்பது வெறும் கற்பனை அல்ல)

இத்தகையதொரு சூழ்நிலையில்தான், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க – சோவியத் வல்லரசுகளின் போட்டாபோட்டியை ஒழித்துக்கட்டுவதற்காக, 1972 இல் "இந்துசமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும்" என்ற ஒரு தீர்மானத்தை ஐ.நா.வில் இலங்கை கொண்டு வந்தது. அந்தத் தீர்மானம் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் ஆதரவு பெற்று நிறைவேறியது. இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதற்காக இலங்கை பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க நேரடியாகவே அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். (இந்தத் தீர்மானத்தை வரைவதிலும், அதை பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவதிலும் சீனா தனது இராஜதந்திரப் பங்களிப்பை பின்னணியில் இருந்து வழங்கியது)

இலங்கையால் சமர்ப்பிக்கப்பட்டு, ஐ.நா.வில் நிறைவேறிய இந்தத் தீர்மானம், இலங்கையின் அணிசேராக் கொள்கைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக இருந்தது.

ஆனால், இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான வலதுசாரி இந்துத்துவ பாரதீய ஜனதா கட்சி அரசு ஆட்சிக்கு வந்ததும், இந்து சமுத்திரப் பிராந்திய சமநிலை பாதிப்புக்குள்ளானது. அதற்குக் காரணம் மோடி அரசு அமெரிக்காவுடன் வைத்த அரசியல் – பொருளாதார – இராணுவ கூட்டாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள பெரிய நாடான இந்தியாவில் தனக்குச் சாதகமாக ஏற்பட்ட மாற்றத்தை மேலும் வலுப்படுத்தவே, அமெரிக்கா இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம் போன்ற நாடுகளில் "மக்கள் கிளர்ச்சி" என்ற போர்வையில் கலகங்களை ஏற்படுத்தி, தனக்குச் சாதகமான ஆட்சி மாற்றங்களைச் செய்து முடித்தது.

அதன் காரணமாகவே, இலங்கையில் அநுரகுமார திசாநாயக்க தலைமையில் அமெரிக்க சார்பு அரசு ஏற்படுத்தப்பட்டது. ஆதனால்தான், தற்போதைய மத்திய கிழக்கு மோதலில் இலங்கை அரசு அமெரிக்க – இஸ்ரேல் அணிக்கு ஆதரவாக எடுத்துள்ள நிலைப்பாடு ஆகும். இலங்கையை தனது அச்சில் கட்டிப் போடுவதற்காக. அமெரிக்கா ஏற்கெனவே இலங்கையுடன் பல இரகசிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. (இது போன்ற சில ஒப்பந்தங்களை அநுர அரசு, மோடியின் இந்திய அரசுடனும் செய்துள்ளது) இந்த ஒப்பந்தங்களில் என்ன உள்ளது என்பது நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

எனவே இத்தகைய சூழலில், உலக மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளிடமிருந்து இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், இறையாண்மை என்பனவற்றைப் பாதுகாப்பதானால், இலங்கையின் தற்போதைய அடிமை அரசு அகற்றப்படுவது முக்கியமானது. அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதே தேசபக்த – ஜனநாயக – முற்போக்கு சக்திகளின் இன்றைய தலையாய கடமையாகும்.

முதலாளித்துவ வர்க்க, குட்டி முதலாளித்துவ வர்க்க சித்தாந்தத்திற்கு எதிராக நாம் இன்னும் ஒரு நீடித்த போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் சித்தாந்தப் போராட்டத்தை கைவிடுவது தவறு. தவறான கருத்துக்கள் மற்றும் நச்சுக்களை எல்லாம், பூதங்கள் மற்றும் பிசாசுகளை எல்லாம் விமர்சனத்துக்குட்படுத்த வேண்டும். அவை தம் விருப்பப்படி தலைவிரித்தாடுவதை அனுமதிக்கக் கூடாது. இருந்தும் விமர்சனம் என்பது நியாயம் நிறைந்ததாக, ஆராய்ந்து விளக்குவதாக, நம்பிக்கையூட்டுவதாக இருக்க வேண்டும். கரடு முரடான அதிகாரத்துவம் கொண்டதாக, அல்லது வறட்டு வாதமாக இருக்கக் கூடாது. நிலையியல் அடிப்படையிலானதாகவும் இருக்கக் கூடாது.

–மாவோ

ஏகாதிபத்திய போர்: ஈரானுக்கு எதிரான போர் குறித்து

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய ஈனச்செயலுக்கு சர்வதேச அமைப்பில் இடமில்லை

அமெரிக்காவின் முடிவில்லாத போர்களை முடிவுக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்தே டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தார். அந்த வாக்குறுதி இப்போது மேற்கு ஆசியாவில் சாம்பலாகக் கிடக்கின்றது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் இணைந்து, பெப்ரவரி 28 அன்று ஈரானுக்கு எதிராக முழு அளவிலான போரைத் தொடங்கி, அதன் உச்சநிலைத் தலைவர் அயதுல்லா அலி காமேனியைப் (Ayatollah Ali Khamenei) படுகொலை செய்த அந்த அதிதீவிர வலதுசாரி குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர் (ட்ரம்ப்), ஓவல் அலுவலகத்தை (Oval Office) அலங்கரித்த மிக மோசமான போர்க்குணமிக்கவர்களில் ஒருவர் என்பதை நிரூபித்துள்ளார்.

இந்த இருவரின் கைகளிலும் இரத்தம் படிந்துள்ளது: ஒருவர், அமெரிக்காவை ஒரு தறுதலை வல்லரசாக (rogue superpower) மாற்றிக்கொண்டிருக்கும் நிலையற்ற தீவிர தேசியவாதி. மற்றவர், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் போர்க்குற்றங்களுக்காகத் தேடப்படும் ஒரு விஸ்தரிப்புவாத இனத்தேசியவாதி (expansionist ethnonationalist). ட்ரம்ப் பதவியேற்ற 13 மாதங்களில் குறைந்தது ஏழு நாடுகளின் மீது குண்டுவீச்சு நடத்தியுள்ளார். நெதன்யாகுவின் கீழ், இஸ்ரேல் சர்வதேச சட்டத்தின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டே செயல்பட்டு வருகின்றது.

பாரசீக வளைகுடா நாடுகள் மற்றும் ஜோர்டானில் உள்ள இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க தளங்களைக் குறிவைத்து ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் மூலம் பதிலடி கொடுத்துள்ளது. இது போரை விஸ்தரிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. உலகளாவிய பொருளாதார பாதிப்பை, குறிப்பாக இந்தியா போன்ற முக்கிய எண்ணெய் இறக்குமதி நாடுகளுக்கு ஏற்படுத்தக்கூடிய முக்கியமான ஹோர்முஸ் நீரிணையை (Strait of Hormuz) மூடுவதாகவும் தெஹ்ரான் அறிவித்துள்ளது.

தெளிவாகச் சொல்வதானால், இஸ்ரேல்

சொல்வது போல இது ஒரு ‘தற்காப்புக்கான முன்னெச்சரிக்கை’ (pre-emptive) போர் அல்ல. ஈரான் தாக்குதலை நடத்தத் தயாராக இருந்தது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, ஓமான் நாட்டின் மத்தியஸ்தத்தில் வாஷிங்டனுடன் தெஹ்ரான் தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தது. பெப்ரவரி 27 அன்று, ஓமானின் வெளியுறவு அமைச்சர் பத்ர் அல்–புசைதி (Badr al-Busaidi), ஈரான் அணுகுண்டைத் தயாரிக்காது அல்லது அணுசக்தித் தேவையான பொருட்களை சேமிக்காது என்ற உறுதிமொழியின் அடிப்படையில் ஓர் உடன்பாடு எட்டக்கூடியதாக இருந்தது என்று கூறினார்.

ஆனால் சில மணிநேரங்களிலேயே, அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய ஏவுகணைகள் ஈரானைத் தாக்கி, அந்நாட்டின் தலைவரையும் உயர்மட்டத் தலைவர்களையும் கொன்றன. இராஜதந்திரத்தை மீறி படைபலம் பயன்படுத்தப்படுவது இது முதல் முறையல்ல. 2015 ஆம் ஆண்டு ஈரானுடன் செய்து கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தை, 2018 இல் ட்ரம்ப் ஒற்றை ஆளாகச் சீர்குலைத்தார். ஜூன் 2025 இல், ஈரான் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோதே, இஸ்ரேல் ஒருதலைப்பட்சமாகத் தாக்குதலைத் தொடுத்தது, இது 12 நாள் போருக்கு வழிவகுத்தது. இருப்பினும், இந்த முறை தாக்குதல் மிகவும் ஆபத்தானது.

ட்ரம்ப் கூறுவது போல, இந்தப் போர் ஈரானியர்களுக்கு ‘சுதந்திரம்’ வழங்குவதற்காக அல்ல. சுதந்திரம் என்பதே பேச்சில் இல்லாத பல அடக்குமுறை முடியாட்சிகள் மற்றும் சர்வாதிகார அமைப்புகளுடன் அமெரிக்கா நெருங்கிய உறவைப் பேணி வருகின்றது. தற்காப்பற்ற, நாடற்ற பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இழைக்கும் குற்றங்கள் குறித்தும் வாஷிங்டன் எந்தத் அக்கறையையும் காட்டவில்லை. இது ஒரு விருப்பத்தின் பேரில் தொடுக்கப்பட்ட போர் (war of choice). எதிரியை ஒழிப்பதற்கும், அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நலன்களுக்கு ஏற்ப பிராந்தியத்தை மாற்றியமைப்பதற்காகவும் இது தொடங்கப்பட்டுள்ளது.

சர்வதேச அமைப்பில் இத்தகைய ஈனச்செயலை (thuggery) ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த ஏகாதிபத்திய ஜோடியின் போர் இயந்திரங்கள் ஏற்கனவே இப்பிராந்தியத்தைச் சிதைத்துவிட்டன. நெருப்பு மேலும் பரவுவதற்கு முன், இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டும். அமெரிக்கா பின்வாங்க வேண்டும் மற்றும் இஸ்ரேல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், விதிகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கின் கடைசி எச்சமும் முழுமையாக சிதைந்துவிடும்.

–‘தி இந்து’ ஆசிரிய தலையங்கம்
02.03.2026